ஓம்.

உபநிஷத்பஞ்சகம்.

இது

பேளூர் பண்டித [illegible] ஸ்ரீமத்

[illegible]கேச்வரசாஸ்திரிகளவர்களின் குமாரரும் சிஷ்யரும்

இ[illegible] உபாத்யாயருமான

சென்னை

[illegible] ஹைஸ்கூலில்

ஸம்ஸ்கிருதபண்டிதருமான

நா - ராமநாதசாஸ்திரிகளால்.

ஸம்ஸ்கிருதத்திலிருந்து

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது

திருவல்லிக்கேணி

"ஸ்ரீவாணீபூஷணம்" அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

விலை அணா 5. சென்னை தபாற்கூலி வேறு

(Copyright Registered)

1915

Q2:24
N15

118446

ஓம்.

உபநிஷத்பஞ்சகம்.

இது

பெலாகுர் பண்டித ஸுஹூஸ்ரீ ஸ்ரீமத்

ஈசேச்வரசாஸ்திரிகளவர்களின் குமாரரும் சிஷ்யரும்

இதிஹாஸபுராண உபந்யாஸகரும்

சென்னை

அடையாறு லைப்ரேரியில்

ஸம்ஸ்க்ருதபண்டிதருமான

ரா-ராமநாதசாஸ்திரிகளால்

ஸம்ஸ்க்ருதத்திலிருந்து

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது

திருவல்லிக்கேணி

"ஸ்ரீவாணீபூஷணம்" அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

விலை அணு 5. சென்னை தபாற்கூலி வேறு.

(Copyright Registered)

1915

THE REGISTRAR OF BOOKS 12 APR 1915 MADRAS

PRINTED AT THE 'SRI VANEE BHOOSHANAM' PRESS,
TRIPLICANE, MADRAS.

679
294.592

முகவுரை.

ஸ்ரீமத்ஸர்வேச்வரனுடைய கிருபையால் பூர்த்தியான இந்தக்கிரந்தத்திற்கு 'உபநிஷத்பஞ்சகம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இதில் ஐந்து உபநிஷத்துகள் ஸமஸ்கிருதத்திலிருந்து நேராகத்தமிழில் மொழிபெயர்த்து சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

		பக்கம்.
1.	கர்ப்போபநிஷத்.	1
2.	ஜாபாலி உபநிஷத்.	12
3.	வாஸுதேவோபநிஷத்.	15
4.	யோகதத்வோபநிஷத்.	19
5.	ஸந்யாஸோபநிஷத்.	33

இதில் கர்ப்போபநிஷத் சரீரத்தின் ஸ்வரூபத்தையும், கர்ப்போத்பத்திக்கிரமத்தையும், கர்ப்பத்தில் ஜந்துஇருக்கும் விதத்தையும், பிறகு இந்தசரீரத்தின் தத்வத்தையும், நன்றாய் உபதேசிக்கிறது. ஜாபாலிஉபநிஷத்தை அத்யயனம்செய்தால் பதி, பசு, இவைகளின் ஞானமும் இந்தஞானத்திற்கு ஹேதுவான விபூதியின் மஹிமையும், அந்த விபூதியின் தாரணக்கிரமமும், ஸ்பஷ்டமாய் பிரகாசமாகிறது. வாஸுதேவோபநிஷத்தால் ஊர்த்வபுண்ட்ரத்தின்பெருமையையும், அதற்கு முதல் ஸாதனமான கோபீசந்தனத்தின் விசேஷத்தையும், அதைதாரணம் செய்துகொள்ளும் விதத்தையும், நன்றாய்த்தெரிந்துகொள்ளலாம். யோகதத்வோபநிஷத்தில் யோகாப்

யாஸம் செய்யும் க்ரமமும், தியானக்கிரமமும், யோகியின் நியமங்களும் லக்ஷணங்களும், யோகியால் உலகத்திற்கு ஏற்படும் நன்மைகளும், விஸ்தாரமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. ஸந்யாஸோபநிஷத் ஸந்யாஸம் செய்து கொள்ளும் விதத்தையும், ஸந்யாஸத்திற்கு அதிகாரிகளின் லக்ஷணத்தையும், அதிகாரமில்லாதவர்கள் ஸந்யாஸம் அடையக் கூடாதென்பதையும், வைராக்யத்தின் ஸ்வரூபத்தையும், ஸந்யாஸிகளின் நியமங்களையும், பேதங்களையும், ஞானத்தின் மஹிமையையும், விசேஷமாய் உபதேசிக்கிறது.

இவ்வுலகத்தில் மனுஷ்யஜன்மத்தையடைந்த நாம் முதலில் கர்ப்பவிஷயங்களையும், பிறகு ஆஸ்திகத்தன்மைக்கு ஹேதுவான புண்ட்ரதாரணத்தின் விசேஷங்களையும், உண்மையான யோகத்தின் ஸ்வரூபத்தையும், ஆசார்யர்களின் ஸம்மதப்படி மோக்ஷத்திற்கு ஹேதுவான ஸந்யாஸத்தின் தத்வங்களையும், நன்றாய்த் தெரிந்துகொள்ள இந்த உபநிஷத்துகள் மிகவும் அநுகூலமாயிருக்கிறபடியால் இவைகளைத் தமிழில் மொழிபெயர்த்து ஒருவரிசையாகச் சேர்த்து வெளிப்படுத்தினேன். இது நமக்கு ஒரு ஜீவிதபாடமாக ஏற்படக்கூடுமென்பது என் அபிப்ராயம். ஆஸ்திகசிரோமணிகள் யாவரும் இதைப்படித்துப்பார்த்து ஆனந்தமடைவார்களாக.

இங்ஙனம்

பௌரூர்:— நா. ராமநாதசாஸ்திரி.

ஓம்.

உபநிஷத்பஞ்சகம்.

1

யஜுர்வேதத்தில்

கர்ப்போபநிஷத்

ஸஹநாவவது + சாந்தி:

சரீரமானது ஐந்துகளை முக்யமாய் உடையதாயும் ஐந்துகளில் இருப்பதாயும் ஆறை ஆச்ரயித்ததாயும் ஆறு குண்யோகங்களோடு கூடியதாயும் ஏழு தாதுக்களையும், மூன்று மலங்களையும் மூன்று காரணங்களையும் உடையதாயும், நான்குவித ஆஹாரமயமாயும் இருக்கிறது. ஐந்துகளை முக்யமாய் உடையது என்பது எப்படி? பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், ஆகிய இந்த ஐந்தும் முக்யமானவை. இவற்றுள் பிருதிவி எது? அப்பு எது? தேஜஸ் எது? வாயு எது? ஆகாசம் எது? கெட்டியாயிருப்பது பிருதிவி. த்ரவமாயிருப்பது ஜலம். உஷ்ணமாயிருப்பது தேஜஸ். ஸஞ்சரிப்பது வாயு. த்வாரமாயிருப்பது ஆகாசம் என்று சொல்லப்படுகிறது. அதில் பிருதிவி தாங்குவதிலும், ஜலம் பிண்ட

மாகச் செய்வதிலும், தேஜஸ் ரூபத்தைக் காட்டுவதிலும், வாயு போவதிலும், ஆகாசம் அவகாசம் கொடுப்பதிலும், காது சப்தங் கேழ்ப்பதிலும், த்வக் ஸ்பர்சத்திலும் (தொடுவதிலும்) நேத்திரம் ரூபத்திலும், நாக்கு ரஸமறிவதிலும் மூக்கு வாஸனை மூகர்வதிலும், வாக்கு பேசுவதிலும், கை எடுப்பதிலும், கால் போவதிலும், பாயு விடுவதிலும், உபஸ்தம் ஆனந்தமடைவதிலுமிருக்கிறது. புத்தியால் தெரிந்து கொள்கிறான், நிச்சயிக்கிறான், மனதால் ஸங்கல்பம் (தீர்மானம்) செய்கிறான். ஸந்தேஹப் படுகிறான். சித்தத்தால் நன்றாய் அறிந்து கொள்ளுகிறான். அஹங்காரத்தால் அகங்காரமடைகிறான். அவையவை அததுகளின் விஷயங்களில் இருக்கின்றன.

(சரீரம்) ஆறை ஆச்ரயித்ததென்பது எப்படி? ரஸங்கள் ஆறு. அவையாவன. தித்திப்பு, புளிப்பு, உப்பு, ஒறைப்பு, துவர்ப்பு, கசப்பு, இவைகளை ஆச்ரயித்தது. இவைகளாலும் ஆச்ரயிக்கப்பட்டது. பதார்த்தங்களின் விகாரங்கள் ஆறு. அவ்வயாவன. இருப்பது, உண்டாவது, விருத்தியடைவது, பக்வமடைவது, குறைவது, நாசமடைவது, என்பவை. இவ்விதம் உண்டாகி விகாரமடைகிறது. மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், ஆக்நேயம், அநாஹதம், விசுத்தம் என்றும் ஆறு சக்ரங்கள். அவைகளின் நாப்பை ஆச்ரயித்தது. காமம் முதலியவும் சமம் முதலியவும் ஆறு குணங்கள். அவைகளின் நிஷ்டையோடு கூடியது. ஷட்ஜம், ஷபம்ரி, காந்தாரம், பஞ்சமம், மத்யமம், தைவதம், நிஷாதம் என்னும் ஏழு இஷ்டசப்தம் அநிஷ்டசப்தம் என்றும் பெயருடையவை. சுக்லம் ரக்தம், கிருஷ்ணம் தாம்ரம் (கருப்பும் சிகப்பும் கலந்தது) பீதம் (மஞ்சள்) கபிலம் (கோரோ

சுரு வர்ணம்) பாண்டரம் (வெளுப்பும் பச்சையும் கலந்தது) என்று ஏழுதாதுக்கள் அந்தந்த வர்ணமுடையவை. எப்போது ஒருவனுக்கு திரவ்யவிஷயங்கள் உண்டாகி விருத்தியடைகின்றனவோ அப்போது ஒவ்வொன்றும் ரஸகுணமுடையதற்கு எது காரணமோ அது ரஸம். ரஸங்கள் ஆறுவிதம். ரஸத்திலிருந்து ரக்தம். ரக்தத்திலிருந்து மாம்ஸம். மாம்ஸத்திலிருந்து மேதஸ். (கொழுப்பு) மேதஸ்ஸிலிருந்து எலும்புகள். எலும்புகளிலிருந்து மஜ்ஜா. (மூளை) மஜ்ஜையிலிருந்து சுக்லம் உண்டாகின்றன. சுக்லம் சோணிதம் இவைகளின் சேர்க்கையால் கர்ப்ப முண்டாகிறது. அது ஹிருதயத்தில் ஸ்தானத்தையடைகிறது. எப்படியென்றால் சாப்பிடக்கூடிய பதார்த்தங்களிலிருந்து அக்நியையும்அக்னியிலிருந்து (பதார்த்தங்களை ஜீர்ணமாக்கும் அக்னியிலிருந்து.) பித்தத்தையும், பித்தஸ்தானத்திலிருந்து வாயுவையும், வாயுஸ்தானத்திலிருந்து ஹிருதய ஸ்தானத்தையும், ப்ராஜாபத்யக்ரமமாய் (பிரஜாபதியான பிரும்மாவால் ஏற்படுத்தப்பட்ட கிரமமாய்) போய் அடைகிறது.

ருதுகாலத்தில் ஸம்பிரயோகத்திற்குப் பிறகு ஒருராத்திரி இருந்தால் அது கரு ஆகிறது. ஏழுநாள் வஸித்தால் குமிழி ஆகிறது. அரைமாஸமாகும்போது பிண்டமாகிறது. ஒரு மாஸமானால் கெட்டியாகிறது. இரண்டு மாதஸமயத்தில் தலை யுண்டாகிறது. மூன்றுமாதகாலத்தில் கால் பிரதேசமுண்டாகிறது. பிறகு நான்காவது மாதத்தில் வயிறும் இடுப்பும், ஐந்தாவது மாதத்தில் முதுகெலும்பும் உண்டாகின்றன. ஆறாவதுமாதத்தில் மூக்கு கண் காதுகள் உண்டாகின்றன. ஏழாவது மாதத்தில் உயிர் உண்டாகிறது. எட்டாவது மாதத்தில் எல்லாம் நிறைந்திருக்கிறது. ஒன்பதாவது மாதத்தில் ஸஞ்சரிக்கின்றது.

சுக்லம் புருஷனுடைய பாகம். சோணிதம் ஸ்திரீயி னுடைய பாகம். பிதாவின் ரேதஸ் அதிகமானால் கர்ப்பசு புருஷனாகிறது. தாயினுடைய ரேதஸ் அதிகமானால் ஸ்திரீ யாகிறது. பொதுவாய் ஸ்திரீகள் காமமுடையவர்கள். அவர்களுக்கு ஸுகம் அதிகமாவதால் ஸ்திரீ பிரஜைகளே அதிகமாய் உண்டாகின்றன. ஸ்திரீ புருஷருடைய ரேதஸ் ஸமமாயிருந்தால் நபும்ஸகமாகும். காரணத்திற்குத் தக்கபடி கார்யமுண்டாகிறது. ஆகையினாலேயே தாய் தந்தையருக்குத் தக்கபடி பிரஜைகள் (குழந்தைகள்) உண்டாகின்றன. ஸ்திரீ புருஷர்கள் சேருங்காலத்தில் மனக்கலக்கமுள்ளவர்களா யிருந்தால் அப்போது குழந்தைகள் குருடாகவும், நொண்டி யாகவும், கூனலாகவும், குள்ளமாகவும், விகாரமான அங்க முடையவையாயும் உண்டாகின்றன. சந்திரஸூர்யக்ரஹண முண்டாயிருந்தால் அங்கங்களின் குறைவுயேற்படும். காலம், தேசம், க்ரியை, த்ரவ்யம், போகம் முதலிய காரணங்களால் அதிகமானவும், குறைந்தவும், ஸமானமானவும், ஸமானமில் லாததுமான ரூபமுடையவர்களாய் உண்டாகிறார்கள். காலம் முதலியவற்றின் யோகம் நல்லதாயிருந்தால் பிரஜைகள் தாய்தந்தையருக்கு ஒத்த ரூபத்தை யடைந்து ஸமானகுண முள்ளவர்களாகிறார்கள். அப்போது கண்ணாடியில் உருவத் தின் பிரதிபிம்பம் ஏற்பட்டது போலிருக்கும். பரஸ்பரம் வாயுவினால் பிடிக்கப்பட்டவர்களுக்கு சுக்லம் இரண்டு விதமானால் அப்போது இரட்டை பிள்ளைகள் உண்டாகும். தாய் தந்தையருக்கு அவ்வாறே ரேதஸ் பிரிந்தால் சேர்ந்த பிரஜை ஒட்டிக்கொண்டு பிறக்கும். மனிதருக்கு ஐந்து அண்டங்கள். ஒன்று ஸாதாரணமானது. இரண்டு சிலருக் குத்தான். அதற்கு மேற்பட்டு ஆயிரத்திலொருவருக் கிருக்கும். அடிக்கடி ரேதஸ் ஸேசனம் செய்தால் பிரஜை

கள் அதிக அங்கமுடையவர்களாய் இருக்கும். பஞ்சபூத ஸ்வரூபனாய் ஸமர்த்தமாய் ஆகிறான். ஐந்து இந்திரியங்களுடன் கூடி கந்தம் ரஸம் முதலியவைகளை அறிகிறான். நல்ல ஞானத்தால் தியானம் செய்து சாச்வதமான பிரணவத்தை சிந்திக்கிறான். பிரும்மஸ்வரூபமான அதை நன்றாய்த் தெரிந்துகொண்டால் ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுகிறான். இந்த சரீரத்தில் எட்டு பிரகிருதிகள் பதினாறு விகாரங்கள் உண்டு. பிறகு ஒன்பதாவது மாதத்தில் எல்லா லக்ஷணங்களும் நிறைந்தவனாகிறான். பூர்வஜாதியை ஸ்மரிக்கிறான். செய்யப்பட்டதும் செய்யப்படாததுமான கர்மம் பிரகாசிக்கிறது. சுபமாயும் அசுபமாயும் உள்ள கர்மத்தை அடைகிறான்

"நான் அநேகாயிரம் யோநிகளைப் பார்த்தேன். அநேகவித ஆஹாரங்களைச் சாப்பிட்டேன். அநேகவித ஸ்தனங்களைப் பானம் செய்தேன். எனக்கு ஸமஸ்த பூமியும் ஜன்மபூமிதான். முன்னால் எனக்கு ஸமஸ்தபூமியும் ச்மசானந்தான். நான் எண்பத்துநான்கு லக்ஷம் யோநிபேதங்களிலும் பிறந்தேன். அடிக்கடி பிறந்தேன். அடிக்கடி இறந்தேன். அடிக்கடி ஸம்ஸாரியாய் இருந்தேன். முதலில் பிறப்பு இறப்பு மறுபடியும் பிறப்பு மறுபடியும் இறப்பு மறுபடியும் பிறப்பு. கர்ப்ப வாஸத்தில் அதிகமான துக்கம். இவ்வாறு ஜன்மங்கள் எடுப்பதிலும் பெரும் அஜ்ஞானமும் துக்கமும் தான். பால்யத்தில் துக்கம் அப்படியே வருத்தமும் பராதீனமாய் இருப்பதும் மூடத்தனமும் உண்டாகின்றன. யௌவனத்தில் நன்மையைச் செய்து கொள்ளாததும், சேம்பலும், கெட்டதைச் செய்வதும், ஸ்திரீ முதலான விஷயங்களில் ஆசையும் உண்டாகின்றன. மூன்று தாபங்களாலும் பீடிக்கப்படுகிறேன். கிழத்தனத்தில் சிந்தையும் ரோகமும்

உண்டாகின்றன. மரணத்திலோ அதிகபயம். ஆசையாலும் அபிமானத்தாலும் காமக்ரோதங்கள் மிகவும் நிறைந்த மிகவும் பயங்கரமான ஜீவிதகாலத்தில் அதிகமான துக்கம் உண்டாகிறது. ஆதலால் ஸ்வாதீனமில்லாதவனாய் துக்கமடைகிறேன். இந்த ஜன்மம் துக்கத்திற்குக் காரணமானது. துக்கஸ்வரூபமானது. ஆதலால் மிகவும் ஸஹிக்கக் கூடாதது. நிவிர்த்திபடைய ஒரு தர்மத்தையும் அடையவில்லை. யோகம் ஞானம் இவைகளுக்கு ஸாதனம் என்னிடம் ஒன்றுமில்லை. கஷ்டம்! துக்கமாகிய கடலில் மூழ்கும் எனக்கு ஒருபிரதீகாரமும் தோன்றவில்லையே. அஞ்ஞானத்தைச் சுடவேண்டும். அஞ்ஞானத்தைச் சுடவேண்டும். காமக்ரோதங்களால் உண்டாகும் ஸங்கடங்களைச் சுடவேண்டும். ஜனனமரண ரூபமான ஸம்ஸாரமாகிய விலங்கையும் சுடவேண்டும். ஆசார்யனிடமிருந்து ஞானத்தை அடையப்போகிறேன்.

யோநியிலிருந்து விடுபட்டால் நான் ஸாங்கியம் யோகம் இவைகளை ஆச்ரயிக்கப் போகிறேன். யோநியிலிருந்து விடுபட்டால் பாபங்களை நாசஞ்செய்து மோக்ஷத்தைக் கொடுக்கிறவரான மஹேச்வரரை சரணமடையப்போகிறேன். யோநியிலிருந்து விடுபட்டதும் அசுபங்களை நாசஞ்செய்து புருஷார்த்தங்களைக் கொடுக்கிறவரான ஜகதீச்வரனை பஜிக்கப் போகிறேன். யோநியிலிருந்து வெளிப்பட்டால் ஸர்வசக்தியுடையவும், சித்ஸ்வரூபமாயும், ஸகல காரணங்களுக்கும் காரணமாயும், பர்காயும், பசுபதியாயும், ருத்ராயும், ஜகத்குருவாயும், மஹாதேவராயும் இருக்கிற பரமேச்வரனைப் பஜனம் செய்யப் போகிறேன். யோநிபந்தத்திலிருந்து விடுபட்டால் பெரும் தபஸ் செய்யப் போகிறேன். கர்ப்பவாஸத்திலிருந்து விடுபட்டால் ஹிருதயத்தில் அமிர்தத்

ஞைக் கொடுக்கும் சாச்வதரான விஷ்ணுவை பஜனம் செய்யப் போகிறேன். தாயின் வயிற்றில் கட்டப்பட்டிருக்கிறேன். இப்போது நான் கட்டுகளிலிருந்து விடுபட்டால் வேறொன்றும் மனதை வைக்காமல் ஒரே பிடிவாதமாய் வாஸுதேவபகவானை பஜித்து ஸந்தோஷப்படுத்தப் போகிறேன். ஆதியில் இதர ஜனங்களுக்காக சுபாசுபகர்மங்களைச் செய்தேன். அதனால் இப்போது நான் ஒருவனாகக் கொளுத்தப்படுகிறேன். பலனை யடைந்த அவர்களெல்லாம் போய் விட்டார்கள். ஆதியில் நாஸ்திகனாகவிருந்து பயங்களையெல்லாம் விட்டுவிட்டு பாபங்களைச் செய்தேன். இப்போது அந்தப்பலனை அனுபவிக்கிறேன். இதற்குப் பிறகு ஆஸ்திகனாய் ஆகப்போகிறேன். இவ்விதம் அநேகவித விஷயங்களை அடிக்கடி ஆலோசித்து ஜனனமரண ரூபமான ஸம்ஸாரத்திலிருந்து உண்டாகும் துக்கங்களையும் அடிக்கடி சிந்தித்து ஒழிவை யடைந்து கர்ப்பத்திலுள்ள ஜந்துவானது அஜ்ஞானம் காமம் கர்மம் முதலியவைகளால் மோஹத்தை யடைகிறது.

இந்த ஜந்துவானது நூற்றுக்கணக்கான ஸ்திரீகளின் யோநியையடைந்தது. இப்போது யோநித்வாரத்தை யடைந்து இந்த ஜந்து விமோசனத்தை அடைய முயலுகிறது. அதில் சக்தியற்றதாய் யந்திரத்தால் பீடிக்கப்படுகிறது. அதிக துக்கத்தால் வருத்தமடைகிறது. பிரஸவவாயுவினால் பிசையப்படுகிறது. ஜனித்தவுடனேயே, வைஷ்ணவ வாயுவினால் வியாபிக்கப்படுகிறான். அப்போது பரலோகஸாதனம் ஒன்றையும் ஸ்மரிப்பதில்லை. அப்போது அபரோக்ஷ ஜ்ஞானம் இவனுக்கு இருக்கிறதில்லை. பூமி ஸ்பர்சம் ஆனவுடன் ஜந்துவானது குரூரதிருஷ்டியுள்ளதாயும் பாமரனாயும் இருக்கும். ஜலத்தால் சுத்தம் செய்த பிறகு அதற்கு

அந்த திருஷ்டிதோஷம் நிவிர்த்தியாகிறது. ஜந்து பிறந்தவுடனே அதற்கு ஜனனமரணம் கர்மம் சுபாசுபங்களுக்கு ஸாதனம் இவைகளின் தோற்ற மெல்லாம் இருப்பதில்லை. வாஸனைகளும் மறைந்து போகின்றன. பிறகு இந்த ஜந்து எப்படி அறிகிறது? வாதம் பித்தம் ச்லேஷ்மம் என்று மூன்று தாதுக்களும் ஸமானமாயிருந்தால் ஆரோக்யம் உண்டாகிறது. அவைகள் ஸமமாயிராவிட்டால் வியாதியுண்டாகிறது. வியாதியுள்ளவன் விஷயங்களை அடைய முடியாது. ஆதலால் பித்தம் அனுரூபமாய் இருந்தால் நன்றாய் அறிகிறான். குறைவாயிருந்தால் அல்பமாய் அறிகிறான். அதிகமாயிருந்தால் அதிகம் தெரிந்துகொள்ளுகிறான். பித்தம் விகாரமடைந்திருந்தால் விகாரமடைந்து பயித்தியம் பிடித்தவனாகிறான். பித்தமாகிய அக்னியானது கர்மாசயத்தை யடைந்து தர்மா தர்மத்தைக் காரணமாயுடைய வாயுவினால் எறிக்கப்படுகிறது. அப்போது அந்தர்போகங்களும் (உள் அனுபவங்களும்) பஹிர்போகங்களும் (வெளியனுபவங்களும்) விறகுபோல் இருக்கின்றன. இந்த அக்னி எவ்வளவு விதம். ஞானாக்னி என்றும் தர்சனாக்னி என்றும் கோஷ்டாக்னி யென்றும் மூன்று விதம். அதில் ஞானாக்னி என்பது மனதிலுள்ளது. தர்சனாக்னி இந்திரியங்களிலுள்ளது. கோஷ்டாக்னியானது தஹரத்திலுள்ளது. அது ப்ராணம் அபானம் இவைகளோடு கூடி தினந்தோறும் நாம் உட்கொள்ளும் சாப்பாடு பானம் முதலான எல்லா பதார்த்தங்களையும் பக்வம் செய்கிறது. நேத்ரமே தர்சனாக்னி. அது விஜ்ஞானவிகாரமாயிருந்து கொண்டு பதார்த்தங்களைக் காட்டுகிறது. அதற்கு மூன்று ஸ்தானங்கள். இந்திரிய கோளகங்கள் உபஸ்தானங்கள். நேத்திரந்தான் வாஸஸ்தானம்.

மனிதனது) ஹிருதயத்தில் தக்ஷிணாக்நியும், வயிற்றில் கார்ஹபத்யமும், முகத்தில் ஆஹவனீயமும் இருக்கின்றன. ஆதலால் புருஷன் யஜமானனாய் இருந்து கொண்டு புத்தியை பத்நியாகவும், ஸந்தோஷத்தை தீக்ஷையாகவும், புத்தீந்திரியங்களை யஜ்ஞபாத்திரங்களாகவும், கர்மேந்திரியங்களைஉபகரணங்களாகவும் வைத்துக்கொண்டு யாகம்செய்கிறான். சாரீரகயாகத்தில் அந்தந்த தேவதைகளே தடஸ்தமான ரித்விக்குகளாய் இருந்துகொண்டு அந்தந்த விடங்களில் யஜமானனுடன் கூட யாகம் செய்கின்றன. அந்த யாகத்தில் சரீரம் சாலை. சிரஸ்ஸின் கபாலம் குண்டம். கேசங்கள் தர்ப்பங்கள். முகமானது அந்தர்வேதி. காமம் நெய். ஜீவித்திருக்கும் காலம் யாககாலம். தஹராசப்தம் ஸாமவேதம். வைகரீ யஜுர்வேதம். பரா பச்யந்தீ மத்யமா ஆகிய இவை ருக்வேதம். க்ரூரவாக்யங்கள் அதர்வவேதத்தின் இலங்கள். பிரியமான வார்த்தைகள் வியாஹ்ருதிகள். ஆயுஸ் பலம் பித்தம் இவை பசுக்கள். மரணமே அவப்ருதஸ்நானம். இந்த யாகத்தில் அக்நிகள் ஜ்வலிக்கின்றன. அதில் தேவர்கள் ஒத்ததான ஸம்ஸாரஸௌக்யத்தை வாங்கிக்கொள்ளுகிறார்கள். இதைநன்றாய்த்தெரிந்துகொள்ளுகிறவர்களெல்லாரும்யாகம்செய்தவர்களே. யாகம்செய்யாதவன் ஜீவிக்கிறவனாகிறதில்லை. இந்த சரீரம்யாகத்திற்கே யாகத்திலிருந்தே உண்டாகிறது. யஜ்ஞத்திற்குத்தகுந்தபடி விகாரத்தையடைகிறது. பரிணாமத்தையடைகிற சரீரதாரையானது துக்கசமுத்திரத்தை யடைகிறது. அப்பேர்ப்பட்ட இந்த சரீரத்திற்கு பல்கள் பதினாறு இரட்டைகொண்டவை. பதினைந்துஸந்திகள். தொண்ணூற்றாறுஅங்குலம் உயரம். நாபிஸ்தானம் பதினான்கு 108 மர்மங்கள். அதில் 72நாடிகள். இவைகளுக்குள் இடா ஸுஷு

ம்னை பிங்களா என்னும் மூன்று நாடிகள் முக்யமானவை. நான்காவது புரீததி. ஐந்தாவது ஜீவன். அதற்குள் பித்தமிருக்கிறது. பித்தத்திற்கு முன்னால் புரீததி. நாபிக்கு (தொப்புளுக்கு) இரண்டு அங்குலம் இடது புரத்தில் பித்த மூலம் ஏற்படுத்தப்பட்டிருகிறது. சாப்பிடப்பட்ட அன்னமானது மூத்திரம் மலம் ஸாரம் ஆக மூன்று விதமாய் ஏற்படுத்தப்படுகிறது. மூத்திரம் இரண்டு பங்காகி தொப்புளுக்குக் கீழ் இடது புரத்தில் ஓடுகிறது. மலமானது ஏழுவிதமாக சரீரத்தின் வலது புரத்திலிருக்கிறது. ஸாரமானது ஐந்து விதமாய் சரீரத்தில் வியாபிக்கிறது. ஆகலால் அன்னபானங்களால் ரேதஸ் ரக்தம் இவை உண்டாகின்றன.

இந்த சரீரத்தில் சஞ்சரிக்கும்படி செய்யும் வாயுவானது பிராணன் என்னப்படும். அது நால் மாதிரியிருக்கு[illegible] அதனால் மூச்சு விடுவது மூச்சு ச்வாஸிப்பது சஞ்சரிப்பது முதலியவை. இது இல்லாவிட்டால் சரீரத்தில் உள்ள ஒரு அங்கமும் பிராணனை அடையாது. வாயுவினாலேதான் [illegible]ஸ்ராவாஹங்கள் மார்பு சக்ரத்திலிருந்து நாடிகளில் போகும்படி செய்யப்படுகின்றன. அங்கிருந்து தோல் முதலான ஸர்வ இந்திரியங்களிலும் போகும்படி செய்யப்படுகின்றன. பாகம் செய்யப்பட்ட ரஸமானது தாயின் வயிற்றில் நாடியின் வழியாய் கர்ப்பப்பையை யடைந்து சிசுவின் சிரஸ்ஸின் கபாலத்தில் நுழைந்து ஸுஷும்னை வழியாய் கர்ப்பத்திலுள்ள ஜந்துவின் பிராணனை திருப்தி செய்கிறது. ஸுஷும்னை என்பது தான் பிரும்மநாடி. கர்ப்பத்தின் பிராணன் முதலானவை அங்கு தோன்றுகிறது. பிறக்கும் ஸமயத்தில் கீழே கீழே நழுவுகிறது. பிறந்த பிறகு ஹிருதயத்தில் ஏற்படுத்தப்படுகிறது. அதை கர்ப்பத்திலுள்ள ஜந்து யோகத்தால்

அடக்கி புருவங்களின் மத்தியிலிருந்து ஸுஷும்னைவரையில் கொண்டுபோனால் அப்போது பரம் பொருளைப்பார்க்கின்றது. இப்படிப்பட்ட தேஹத்தில் அந்தர்யாமியாயும் அமிர்தமாயும் இருப்பது ஆத்மா. ஸாக்ஷியாயிருப்பது புருஷன். அவன் அவித்தையால் சூழப்பட்டு அபிமானியானஜீவனாகிறான். ஜந்துவானது அவித்தையால் வியாபிக்கப்படுகிறது. அவனுக்குமறைவாயிருக்கும் அஜ்ஞானம் விதை. அதன்முளையானது அந்தக்கரணம், அதனுடைய மரம் சரீரம். இந்த சரீரத்தில் எட்டு கோடி மயிர்கள். எண்பது நூறு ஸந்திகள். ஒன்பது நூறு நரம்புகள் ஹிருதயம் எட்டு பலங்கள். நாக்கு 12 பலம். பித்தம் 1 படி. கபம் 1 மரக்கால். சுக்லம் இரண்டு மரக்கால். கொழுப்பு இரண்டுபடி. இதெல்லாம் நாசமடையக்கூடியதென்று தெரிந்துகொண்டு கர்ப்பத்திலுள்ள ஜந்துவானதுபோல ஸுஷும்னையில் ஸ்திரமாய் இருந்துகொண்டுவிவேகியாய் ஆகவேண்டும். அப்படியே மோக்ஷமடைய வேண்டும். மறுபடி சரீரத்தை யடைகிறதில்லை. அப்படியில்லாமல் மூடமாய் ஸம்ஸாரத்தை யடைகிறவனுக்கு, தினந்தோறும் மலமூத்திரங்களைப் பானம் செய்கிற புழுவுக்கு நரகத்தில் எவ்விதமிருக்கிறதோ அவ்விதமே இந்த சரீரத்திலும் இருக்கிறது. ஆதலால் இந்த பரிமாணத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு வைராக்யத்தை யடையவேண்டும். பிப்பலாதரால் உபதேசிக்கப்பட்ட இந்த மோக்ஷசாஸ்திரம் முடிவை யடைந்தது. பிப்பலாதரால் உபதேசிக்கப்பட்ட இந்த மோக்ஷ சாஸ்திரம் முடிவை யடைந்தது.

ஸஹநாவவது + சாந்தி:

ஓம் உபநிஷத் தத்ஸத்

கர்ப்போபநிஷத் முற்றிற்று.

ஸ்ரீ

2

ஸாமவேதத்தில்
ஜாபால்யுபநிஷத்

ஆப்யாயந்து + சாந்தி:

ஸ்ரீபைப்பலாதி என்னும் மஹர்ஷி பகவத்ஸ்வரூபமான ஜாபாலி மஹர்ஷியைக் கேட்டார்.

“பகவானே! பரம தத்துவத்தின் ரஹஸ்யத்தை எனக்குச்சொல்லவேண்டும். தத்வம் எது? ஜீவன்யார்? பசு எது? ஈசன்யார்? மோக்ஷத்திற்கு உபாயம் எது?”

ஜாபாலி:—நன்றாகக் கேட்டீர். எல்லாவற்றையும் நான் தெரிந்து கொண்டபடி நன்றாய்ச் சொல்லுகிறேன்.

பைப்பலாதி:— தாங்கள் யாரிடமிருந்து தெரிந்துகொண்டீர்கள்.

ஜாபாலி:— ஸுப்ரஹ்மண்யஸ்வாமியிடமிருந்து தெரிந்து கொண்டேன்.

பைப்பலாதி:— அவர் யாரிடமிருந்துதெரிந்து கொண்டார்.

ஜாபாலி:— அவர் ஈசானரிடமிருந்து தெரிந்து கொண்டார்.

பைப்பலாதி:— ஸுப்ரஹ்மண்யர் ஈசானரிட மிருந்து எவ்விதம் தெரிந்து கொண்டார்.

ஜாபாலி:— ஈச்வரனுடைய உபாஸனையால் ஸுப்ரஹ்மண்யர் தெரிந்து கொண்டார்.

பைப்பலாதி:— பகவானே எல்லாவற்றையும் கிருபையோடு எனக்கு உபதேசிக்க வேண்டும்.

ஜாபாலி:— அப்படியே ஆகட்டும் என்றுஸகலதத்துவத்தையும் அநுக்ரஹத்தோடு பின் வருமாறுஉபதேசித்தார். “பசுபதியானவர் அஹங்காரத்தினால் வியாபிக்கப்பட்

டிருக்கும்போது ஸம்ஸார முடையவராய்ஜீவனாகிறார். அவரே பசு. ஸர்வஜ்ஞராயும் (எல்லாமறிந்தவராயும்) பஞ்சகார்யங்களோடு கூடியவராயும் ஸர்வேச்வரராயும் இருக்கிற ஈசனே பசுபதி. ஜீவர்பசுக்கள். அவைகளுக்கு பதி (எஜமானன்) ஆகவிருப்பதால் பசுபதி.

பைப்பலாதி:— ஜீவர்கள் எப்படி பசுக்கள். அவைகளுக்கு ஈசன் எவ்விதம் பதி.

ஜாபாலி:— புல்லைத் தின்று கொண்டு விவேகமில்லாமல் பிறரால் உழவு முதலிய வேலைகளில் ஏவப்பட்டு எல்லாதுக்கங்களையும் ஸஹித்துக்கொண்டு தனது எஜமானரால் கட்டப்படுகிற மாடு முதலானவைகள் எவ்விதம் பசுக்களோ அவ்விதம் ஜீவன்கள் பசுக்கள். இந்த மாடு முதலிய வைகளின் எஜமானர்கள் போல ஸர்வஜ்ஞனை ஈச்வரன் பசுபதி.

பைப்பலாதி:— இந்த ஞானம் எவ்வாறு உண்டாகும்.

ஜாபாலி:— விபூதியை தரித்துக் கொள்ளுவதினாலேதான் உண்டாகும்.

பைப்பலாதி:— விபூதியை எவ்விதம் எந்தவிடங்களில் தரித்துக் கொள்ள வேண்டும்.

ஜாபாலி:— பிரும்ம மந்திரங்களால் விபூதியையெடுத்து மந்திரித்து நல்ல ஜலத்தால் மந்திரம் உச்சரித்துக்கொண்டே குழைத்து சிரஸ், நெற்றி, மார்பு, தோள்கள் இவைகளில் மூன்று கோடாக தரித்துக் கொள்ள வேண்டும். இது சைவவ்ரதம். வேதங்களிலெல்லாம் வேதவாதிகளால் கூறப்பட்டிருக்கிறது. இதை நன்றாய் ஆசரிப்பவன் மறு ஜன்மம் அடைவதில்லை. இப்படி தரித்துக்கொள்ளுவது த்ரிபுண்ட்ர தாரண மென்று சொல்லப்படுகிறது. இதன் மூன்று கோடுகளும் கண்புருவத்தின் வரையில் நெற்றியிலிருக்க வேண்டும்

இவைகளுள் முதல் ரேகையானது கார்ஹபத்யாக்னி. அகாரம். ரஜோகுணம். பூலோகம். ஸ்வாத்மா. கிரியாசக்தி. ருக்வேதம். ப்ராதஸ்ஸவநம். பிரஜாபதி தேவதை. இரண்டாவது ரேகையானது தக்ஷிணாக்னி. உகாரம். ஸத்வகுணம். ஆகாசம். அந்தராத்மா. இச்சாசக்தி. யஜுர்வேதம். மாத்யந்தின ஸவனம். விஷ்ணு தேவதை. மூன்றாவது ரேகையானது ஆஹவனீயாக்னி. மகாரம். தமோகுணம். ஸ்வர்க்கலோகம். பரமாத்மா. ஞானசக்தி. ஸாமவேதம். த்ருதீயஸவனம். மஹாதேவ தேவதை. இவ்வாறு த்ரிபுண்ட்ரத்தைத் தெரிந்துகொண்டு பிரும்மசாரி, கிருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸந்நியாஸியாகிய யாராயிருந்தாலும் விபூதியினால் புண்ட்ரதாரணம் செய்துகொண்டால், மஹாபாதகம் உபபாதகம் இவைகளிலிருந்து விடுபடலாம். அவனுக்கு ஸகலவேதங்களையும் அத்யயனம் செய்த பலன் வருகிறது. அவன் ஸகலதேவதைகளையும் தியானம் செய்து ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தவன் ஆகிறான். ஸகலருத்ரமந்திரங்களையும் ஜபம் செய்தவன் ஆகிறான். மறுபடி ஜன்மம் அடைவதில்லை. மறுபடி ஜன்மம் அடைவதில்லை.

ஓம். ஸத்யம். உபநிஷத்.

ஆப்யாயந்து + சாந்தி.

ஜாபால்யுபநிஷத் முற்றிற்று.

ஸ்ரீ

3

ஸாமவேதத்தில் வாஸுதேவோபநிஷத்.

ஆப்யாயந்து + சாந்தி.

ஸர்வேச்வரனான வாஸுதேவனை நாரத மஹர்ஷி நமஸ்கரித்து, "ஹே பகவானே! ஊர்த்வபுண்ட்ர விதியையும், அதற்கு வேண்டிய திரவ்யத்தையும், மந்திரங்களையும், தாரணம் செய்து கொள்ளும் ஸ்தானங்களையும், தயையோடு எனக்கு உபதேசிக்கவேண்டும், என்று கேட்டார். வாஸுதேவர் அனுக்ரஹத்தோடு அடியில் வருமாறு உபதேசிக்கின்றார்:

வைகுண்டஸ்தானத்திலிருந்து உண்டானதாயும், எனக்கு பிரியமாயும், எனது பக்தர்களான பிரும்மா முதலியவர்களால் தரித்துக் கொள்ளப்படுகிறதாயும் இருக்கிற விஷ்ணு சந்தனம் எனது அங்கத்தில் ஒவ்வொரு நாளும் கோபிகாஸ்திரீகளால் பூசப்பட்டு பிறகு அலம்பப்படுவதால் கோபீசந்தனம் என்னப்படுகிறது. எனது அங்கத்தில் பூசப்படுவதாயும், பரிசுத்தமாயும், சக்ர தீர்த்தத்தின் மத்தியிலிருக்கிறதாயும், சக்ரத்தோடு கூடினதாயும், மஞ்சள் வர்ணமாயும் இருக்கும் இந்த கோபீசந்தனம் முக்திக்கு ஸாதனமாகிறது. கோபீசந்தனத்தை நமஸ்கரித்து எடுத்துக்கொண்டு, "பாவத்தைப் போக்குகிறதாயும், விஷ்ணுவின் தேஹத்திலிருந்து உண்டானதாயும், சக்ரத்தால் அடையாளம் செய்யப்பட்டதாயும் இருக்கிற கோபீசந்தனமே உனக்கு நமஸ்காரம். தரித்துக் கொள்ளுவதால் நீ முக்தியைக் கொடுக்க வேண்டும்" என்று பிரார்த்தித்து சுத்தமான ஜலத்தை யெடுத்து குழைக்கவே

ண்டும். வேதமந்திரங்களினாலேயாவது விஷ்ணுகாயத்ரியி
னாலேயாவது கேசவாதி திவ்யநாமங்களினாலேயாவது தரித்
துக் கொள்ள வேண்டும். பிரும்மசாரியாவது வானப்ரஸ்த
னாவது நெற்றி கழுத்து ஹிருதயம் தோள்கள் இவைக
ளில் விஷ்ணு காயத்ரியினாலாவது கிருஷ்ணாதி திவ்ய நாமங்
களினாலேயாவது தரித்துக் கொள்ள வேண்டும். கிருஹஸ்
தன் மூன்றுதடவைமந்திரித்து "சங்கம் சக்ரம் கதைஇவை
களை கையில் உடையவும் த்வாரகையை ஸ்தானமாய் உடை
யவுமான அச்யுத! கோவிந்த! புண்டரீகாக்ஷ! சரண
மடைந்தஎன்னை ரக்ஷிக்கவேண்டும்" என்றுதியானம் செய்து
கொண்டு நெற்றி முதலானபனிரெண்டுஸ்தானங்களில் பவித்
திரவிரலால்(மோதிரவிரலால்) வைஷ்ணவ காயத்ரியினாலாவது
கேசவாதிதிவ்யநாமங்களினாலாவது தரித்துக் கொள்ளவேண்
டும். பிரும்மசாரியானாலும்கிருஹஸ்தனானாலும் நெற்றி, ஹிரு
தயம், கழுத்து, தோள்கள் இவைகளில் வைஷ்ணவகாயத்ரியி
னாலாவது கிருஷ்ணாதி நாமங்களினாலாவது தரித்துக்கொள்
ளவேண்டும். ஸந்யாஸி ஆள் காட்டிவிரலால் சிரஸ், நெற்றி,
ஹிருதயங்களில் ஓங்காரத்தினாலேயே தரித்துக்கொள்ளவே
ண்டும். பிரும்மாமுதலானமூர்த்திகளும், வ்யாஹிருதிகளும்,
வேதங்களும், அக்னிகளும், காலங்களும், அவஸ்தைகளும்,
ஆத்மாக்களும், புண்ட்ரங்களும் மூன்றே. இந்த ஊர்த்வ
புண்ட்ரம் பிரணவஸ்வரூபமானது. அதுவே மூன்றாயிற்று.
உயர்ந்த பதவியைக் கொடுப்பதால்பிரணவாதிகாரிஊர்த்வபு
ண்ட்ரத்தை தரித்துக்கொள்ளவேண்டும். பரமஹம்ஸன் நெற்
றியில் ஓங்காரத்தால் ஒரே ஊர்த்வபுண்ட்ரத்தைதரித்துக்
கொள்ள வேண்டும். தத்துவமாகிற தீபத்தின் பிரகாசம்
போன்ற பரமாத்மாவை தரிசிக்கிற யோகி எனது ஸாயுஜ்
யத்தை அடைவான்.

அல்லது ஹ்ருதயஸ்தானத்திலுள்ள புண்ட்ரமத்தியிலாவது ஹ்ருதய கமலத்தின் மத்தியிலாவது. "அதன் மத்தியில் அல்பமாயும் கருத்த மேகத்தின் நடுவிலுள்ள மின்னல் கொடிபோல் பிரகாசிக்கிறதாயும் நீவார தான்யத்தின் நுனி போல் மெல்லியதாயும் உயர இருக்கிறதாயும் நெருப்பின் ஜ்வாலை போன்றதாயும் இருக்கிற பரமாத்மா இருக்கிறார்" என்று த்யானம் செய்து கொண்டு புண்ட்ரத்திலுள்ள பரமாத்மாவை ஹ்ருதய கமலத்தில் த்யானுப்பாஸம் செய்யவேண்டும். இவ்வாறு கிரமமாக பரமாத்மாவாயும் பரமமாயும் இருக்கிற ஹரியாகிய என்னை ஒரே மனதாய் ஹ்ருதய கமலத்தில் தியானம் செய்கிறவன் மோக்ஷமடைவான். இவ்விஷயத்தில் ஸந்தேகமில்லை. எனது ரூபமானது ஆத்யந்த மற்ற பிரும்மஸ்வரூபம். ஸ்வயம் பிரகாசமுள்ள ஸச்சிதானந்தமானது.

இதை பக்தியால் தெரிந்துகொள்ள வேண்டும். அவ்யயமான பிரும்மமான நான் ஸகல ஜங்கமஸ்தாவரங்களிலும் எள்ளில் எண்ணெய் போலவும், கட்டையில் நெருப்புப்போலவும், பாலில் நெய்போலவும் புஷ்பங்களில் வாஸனைபோலவும், ஆத்மாவாகவஸித்துக் கொண்டிருக்கிறேன். பிரும்மரந்திரத்திலும், புருவங்களின் மத்தியிலும், ஹ்ருதயத்திலும் கோபீசந்தனத்தை தாரணம் செய்துகொண்டு சித்ஸூர்யனை விஷ்ணுவான பரமாத்மாவை தியானம் செய்கிறவன் பரமஸ்தானத்தை யடைவான்.

ஊர்த்துவ (உயர்ந்த) தண்டத்தையுடையவும் ஊர்த்துவரேதஸ்ஸாயும், ஊர்த்துவபுண்ட்ரம் உடையவும், ஊர்த்துவயோகமுடையவுமான. நான்கு ஊர்த்துவத்தையுடைய ஸந்யாஸி ஊர்த்துவமான (மேலான) ஸ்தானத்தையடைகிறான். இவ்

வாறு நிச்சயமான இந்தஞானம் என்னு பக்தியால் தானே ஸித்திக்கிறது. நித்யம் கோபீசந்தனத்தை தரித்துக் கொள்ளுவதால் அசஞ்சலமான பக்தியுண்டாகும். ஸமஸ்தமான வைதிகர்களான பிராம்மணர்களுக்கும் கோபீசந்தன தீர்த்தத்தாலூர்த்வபுண்ட்ரம் விதிக்கப்படுகிறது. கோபீசந்தனமில்லாவிட்டால் முமுக்ஷுவானவன் துளஸியின் வேரிலுள்ள மண்ணை தரித்துக் கொண்டால் பிரும்ம ஞானம் ஸித்திக்கும். அதிராத்ரம் அக்னிஹோத்ரம் இவைகளின் விபூதியால் வேதமந்திரங்களாலாவது வைஷ்ணவகாயத்ரியாலாவது பிரணவத்தாலாவது உத்தூளனம் செய்து கொள்ள வேண்டும். இவ்வித விதியால் கோபீசந்தனத்தை தரித்துக்கொள்ள வேண்டும். இதை அத்யயனம் செய்கிறவனும் ஸர்வபாபங்களிலிருந்தும் பரிசுத்தனாகிறான் அவனுக்கு பாபபுத்தி உண்டாவதில்லை. ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தவனாகிறான். ஸமஸ்தமான யாகங்களையும் செய்தவனாகிறான். ஸகல தேவராலும் பூஜிக்கப்படுகிறான். ஸ்ரீநாராயணனான என்னிடம் அவனுக்கு அசஞ்சலபக்தியுண்டாகிறது. அவன் நன்றாய் ஞானத்தையடைந்து விஷ்ணுவின் ஸாயுஜ்யத்தை யடைகிறான். மறுபடி திரும்புவதில்லை. மறுபடி திரும்புவதில்லை. என்று பகவான் வாஸுதேவர் சொன்னார். இதையாவது எவன் படிக்கிறானோ அவனும் இவ்விதமே ஆகிறான்.

ஓம் ஸத்யம். உபநிஷத்.

ஆப்யாயந்து + சாந்தி:

வாஸுதேவோபநிஷத் முற்றிற்று.

ஸ்ரீ

4

யஜுர்வேதத்தில்

யோகதத்வோபநிஷத்

ஸஹநாவவது + சாந்தி:

ஓம். யோகிகளின் நன்மைக்காக யோகதத்வத்தைச் சொல்லுகிறேன். இதைக் கேட்டாலும் படித்தாலும் எல்லா பாபங்களினின்றும் விடப்படுகிறான். புருஷோத்தமனான விஷ்ணுவானவர் மஹாயோகியாயும் பூதங்களெல்லாவற்றிற்கும் ஆச்ரயமாயும் பெருந்தவல்லமையுடையவராயும் இருந்துகொண்டு தத்வமார்க்கத்தில் தீபம்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார். பிர்ம்மாவானவர் உலகங்களுக்கெல்லாம் நாதரான அந்த விஷ்ணுவை ஆராதித்து நமஸ்கரித்து எட்டு அங்கங்களுடன் கூடின யோகதத்வத்தை எனக்குச்சொல்லவேண்டுமென்று கேட்டார். அப்போது விஷ்ணுவானவர் 'தத்வத்தைச்சொல்லுகிறேன். கேளும்' என்றார். ஜீவர்களெல்லாம் ஸுகங்களாலும், துக்கங்களாலும், மாயையாலும், சுற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முக்தியுண்டாக்கக்கூடிய மார்க்கமானது மாயையைத்தொலைப்பதாயும் ஜனனம் மரணம் கிழத்தனம் வியாதி இவைகளை நாசம் செய்வதாயும் மரணத்தைக்கடந்ததாயும் அநேகமார்க்கங்களால் அடையக்கூடாததுமான பரமபதமான கைவல்யமே. எல்லாரும் சாஸ்த்திரங்களாகிற வலைகளில் விழுந்து, அந்த சாஸ்திர ஞானத்தால் மோஹித்திருக்கிறார்கள். இந்த கைவல்யமானது தேவர்களாலும் பிரகாசப்படுத்தமுடியாதது. ஸ்வாத்மாவின் பிரகாசரூபமாயிருக்

கிற அது சாஸ்திரத்தால் பிரகாசப்படுத்தக்கக்கூடியதா ?
நிஷ்கலமாயும் நிர்மலமாயும் சாந்தமாயும் எல்லாவற்றிற்கும்
மேலானதாயும் ஆமயமற்றதாயும் இருக்கிறவஸ்துவே ஜீவரூ
பத்தையடைந்து, புண்யம் பாபம் இவைகளின் பலன்களால்
சூழப்பட்டிருக்கிறது. பரமாத்ம ரூபமாயும் நித்யமாயும் இருக்
கிற அந்த வஸ்து எவ்விதம் ஜீவனாயிற்று. ஸகல[illegible]பதம்
இவைகளைத்தாண்டினதாயும் ஞானரூபமாயும் நிரஞ்ஜனமாயு
மிருக்கிற அந்தபொருள் ஜலம்போல் பிரகாசித்துக்கொண்டிரு
க்கிறது. அதில் அஹங்காரம் உண்டாயிற்று. அப்போது ஐந்
துகளை முக்யமாய் உடையதாயும் தாதுக்களால் கட்டப்பட்ட
தாயும் குணஸ்வரூபமாயும் ஸுகதுக்கங்களோடு கூடியதா
யும் ஆகி ஜீவரூபத்தையடைந்தது. அதனால் பெரியோர்கள் பர
மாத்மாவினிடம் ஜீவனென்னும் பெயரைச்சொல்லுகிறார்கள்.
ஆனால் ஜீவனென்பது காமம் குரோதம் பயம் மோஹம் லோ
பம் மதம் ரஜோகுணம் ஜனனம் மரணம் கிருபணத்தன்மை
தூக்கம் சோம்பல் பசி தாகம் பேராசை வெட்கம் பயம் து
க்கம் சந்தோஷம் இதுமுதலான தோஷங்களால் விடுபட்டு
கேவலமாயிருக்கக்கூடியது. ஆகையால் இந்த தோஷங்களை
விநாசஞ்செய்வதற்கு உனக்குஉபாயம் சொல்லுகிறேன். யோ
கம் இல்லாத ஞானம் எப்படி மோக்ஷத்தைக்கொடுக்கும். அப்
படியே ஞானமில்லாத யோகமும் மோக்ஷத்திற்கு யோக்ய
மில்லை. ஆதலால் மோக்ஷார்த்தியானவன் ஞானத்தையும்
யோகத்தையும் நன்றாய் அப்யாஸம் செய்யவேண்டும். அஞ்
ஞானத்தாலேயே ஸம்ஸாரமுண்டாகிறது. ஞானத்தாலேயே
விடுபடுகிறது. ஆதியில் ஞானஸ்வரூபமே; அந்தஞானமானது
ஞேயத்தை (அறியப்படும்பொருளை) முக்யமாய் உடையது.
நிஷ்களமாயும் நிர்மலமாயும் ஸாக்ஷாத்ஸச்சிதாநந்தரூபமா
யும் உத்பத்தி ஸ்திதி ஸம்ஹாரம் விருத்தியடைவது என்று.

வையற்றதாயும் இருக்கிற கைவல்யமான பரம்பொருளை நிஜஸ்வரூபமென்று அறிவது எதுவோ அதுவே ஞானமென்னப்படும். யோகமென்பது வ்யவஹாரத்தால் வெகுவாய் பேதமடைகிறது. அதாவது மந்திரயோகம் லயயோகம் ஹடயோகம் ராஜயோகம் என்று சொல்லப்படும்.

ஆரம்பம் கடம் பரிசயம் நிஷ்பத்தி என்னும் அவஸ்த்தைகள் எல்லாவற்றிற்கும் இருக்கின்றன. ஏ பிரும்மா இவைகளின் லக்ஷணத்தைச் சொல்லுகிறேன் கேளும். மாத்ருகையோடுகூடினமந்திரத்தை பன்னிரண்டுவருஷம் ஜபம்செய்கிறவன் அணிமாதிகுணங்களோடுகூடின ஞானத்தைக்கிரமமாய் அடைகிறான். அல்பபுத்தியுள்ள அதமமான (கீழான) ஸாதகன்தான் இதை ஸேவிப்பான். லயயோகமென்பது மனதின் லயமன்றே கோடிதடவை கூறப்பட்டிருக்கிறது. அதாவது நடந்து கொண்டும் நின்று கொண்டும் தூங்கிக்கொண்டும் சாப்பிட்டுக் கொண்டும் இருக்கும் போது நிஷ்களமான ஈச்வரனை தியானம் செய்ய வேண்டும். இதுவே லயயோகம். பிறகு ஹடயோகத்தைக் கேளும். யமம், நியமம், ஆஸனம், பிராணனை அடக்குதல், ப்ரத்யாஹாரம், தாரணம், புருவங்களின் மத்தியில் ஈசவரனை த்யானம் செய்தல், ஸமாதி என்பவைகள் ஸாஷ்டாங்கமான (எட்டு அங்கங்களோடு கூடின)யோகமென்னப்படும். மஹாமுத்ரை, மஹாபந்தம், மஹாவேதம், கேசரி, ஜாலந்தரம், ஒட்டியாணம், மூலபந்தம், தீர்க்ககாலம் பிரணவத்தைத்தியானம் செய்தல், ஸித்தாந்தத்தைக் கேட்டல் இவைகளும் யோகமே. வஜ்ரோலீ, சாமரோலீ, ஸஹஜோலீ, என்றும் மூவகைப்படும். ஏ பிரும்மா! இவைகளின் லக்ஷணத்தைத் தனித்தனியாய் சொல்லுகிறேன் கேளும். யமங்களுக்குள் லகுவான ஆஹாரமே முக்யமானது. வேறொன்றுமல்ல. நியமங்களுக்குள்

அஹிம்ஸையே முக்யமானது. ஸித்தம், பத்மம், ஸிம்ஹம், பத்ரம் என்றும் நான்கு வகைப்படும் முதலில் அப்யாஸம் செய்யும் போது விக்னங்கள் உண்டாகும். சோம்பல், ஆத்மஸ்துதி (தன்னை புகழ்ந்து கொள்ளுதல்) துர்ஜனங்களோடு ஸஹவாஸம். மந்திரங்கள் முதலியவைகளை ஸாதிப்பது. ரஸவாதம், ஸ்திரீசாபல்யம் ஆகிய இவைகளை கானல்நீருக்கு ஸமானமாயும் இடையூறுகளாகவும் நினைத்து, நல்ல புத்தியுள்ள ஸாதகன் புண்யங்களின் மஹிமையால் விட்டுவிட வேண்டும். பிறகு பத்மாஸனத்தை அடைந்து பிராணாயாமம் செய்யவேண்டும். மிகவும் அழகானதாயும், அல்பமான வாசற்படியை யுடையதாயும் த்வாரங்களில்லாததாயும், சாணியினாலாவது, சுண்ணாம்பினாலாவது, நன்றாய் மெழுகப் பட்டதாயும், மோட்டுப்பூச்சி, கொசு, இவைகளில்லாததாயும் தினந்தோறும் துடைப்பத்தால் நன்றாய் பெருக்கப்பட்டதாயும், நல்ல வர்ஸனை யுண்டுபண்ணப்பட்டதாயும் சாம்பிராணிப்புகை போடப்பட்டதாயும் இருக்கும்படி மடத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அதில் அதிஉயரமற்றதாயும் அதிகப்பள்ளமில்லாததாயும், வஸ்திரம் கிருஷ்ணாஜினம் தர்ப்பம் இவைகள் பரப்பியதாயும் உள்ள ஆஸனத்தில் உட்கார்ந்து கொண்டு ஸாதகன் நல்ல புத்தியோடு பத்மாஸனத்தை யடைந்து சரீரத்தை நேராக (கோணலில்லாமல்) வைத்துக் கொண்டு, இஷ்ட தேவதையை நமஸ்கரிக்கவேண்டும். பிறகு வலது கையினுடைய கட்டை விரலினாலேயே பிங்களையைத் தடுத்து இடையினால் மெள்ள மெள்ள வாயுவை பூரணம் செய்யவேண்டும். பிறகு சக்திக்குத் தக்கபடி விரோதமில்லாமல் கும்பகத்தைச் செய்யவேண்டும். பிறகு வேகமில்லாமல் மெதுவாகவே பிங்களையினால் விடவேண்டும். பிறகு பிங்களையினால்

நிறப்பி மெதுவாய் வயிறை நிறப்பவேண்டும், அப்படியே சக்திக்குத் தக்கபடி தரித்துக் கொண்டிருந்து இடையினால் மெதுவாய் விடவேண்டும். எந்த நாடியினால் விட வேண்டுமோ அதனால் நிறப்பி விரோதமில்லாமல் தரித்துக் கொள்ள வேண்டும். வேகமில்லாமலும் தாமதமில்லாமலும் முழங்காலை பிரதக்ஷிணம் செய்து விரல் சொடுக்கலைச் செய்ய வேண்டும். அது மாத்ரை என்னப்படும். மெதுவாய் இடையினால் 16 மாத்திரையினால் வாயுவை ஏற்றி கும்பகம் செய்யவேண்டும். பிறகு நிறைந்ததை 64 மாத்திரையினால் பிங்களாநாடியினால் விடவேண்டும். பிறகு 32 மாத்திரையினால் பிங்களையினால். மிகவும் ஜாக்கிரதையாய் முன் போல் வாயுவை நிறப்பி காலையிலும் மத்தியானத்திலும் ஸாயங்காலத்திலும் நடுராத்திரியிலும் ஆக நான்கு தடவை மெதுவாய் 80 வரையில் கும்பகத்தை அப்பாஸம் செய்யவேண்டும். இவ்வாறு மூன்று மாதம் அப்பஸித்தால் நாடிசுத்தியுண்டாகும். எப்போது நாடிசுத்தியுண்டாகுமோ அப்போது யோகியின் தேஹத்தில் வெளிப்படையாய் உண்டாகும் அடையாளங்களை முழுவதும் சொல்லுகிறேன் கேளும். சரீரம் லேசாயிருப்பது. இளைத்திருப்பது. காந்தி வயிற்றில் அக்னிவிருத்தி இவை அவசியமுண்டாகும். யோகாப்பாஸம் செய்பவன் யோகத்திற்கு இடையூறான ஆகாரத்தை விட்டு விடவேண்டும். உப்பு. கடுகு. புளிப்பு. உஷ்ணம். ஒப்பு. இவைகளையும், கரிகாய்களையும், பெருங்காயம் முதலானதுகளையும், நெருப்பு ஸ்திரீ. வழி நடப்பது, காலையில் ஸ்நானம் செய்வது உபவாஸம் முதலான சரீரத்திற்கு கிலேசமுண்டு பண்ணக் கூடியவைகளையும் விட்டு விடவேண்டும். அப்யாஸகாலத்தில் முதலில் பால் நெய் இவைகளுடன் சாப்பிடுவது சிரேஷ்ட

மானது. கோதுமை, பயறு, சம்பாஅன்னம் இவைகளும் யோகத்தை விருத்தி செய்யக்கூடியவைகளென்று சொல்லுகிறார்கள். அதற்கு மேல் இஷ்டப்பிரகாரம் வாயுவை தரிப்பதில் சக்திபூர்ணவனாகலாம். இப்படி இஷ்டப்பிரகாரம் வாயுவை தரிப்பதால் கேவலமான கும்பகம் ஸித்திக்கும். ரேசக பூரகமில்லாமல் கேவலகும்பகமே சித்தித்தால் மூன்று உலகங்களிலும் அவனுக்குக்கிடைக்காதது ஒன்றுமில்லை. முதலில் அதிவேர்வை யுண்டாகும். அதை அடக்கிக் கொள்ளவேண்டும். பிறகு வரிசையாய் மெள்ளமெள்ள வாயுவை தரித்துக் கொள்ளுவதால் ஆஸனத்திலிருக்கும் யோகிக்கு தேஹத்தில் அசைவு உண்டாகும். பிறகு மிகவும் அதிகமாய் அப்யஸிப்பதால் தார்துரி என்பது தானே உண்டாகும் தர்தூரம் (தவளை) என்பது எப்படி துள்ளித்துள்ளிக் குதித்துக் கொண்டு போகிறதோ அப்படி பத்மாஸனத்திலிருக்கும் யோகியானவன் பூமியில் போவான். பிறகு இன்னும் அதிகமாய் அப்யஸிப்பதால் பூமியை விட்டே எழுந்திருப்பான். இவன் பத்மாஸனத்திலிருந்து கொண்டே பூமியை விட்டு விட்டு உயர இருப்பான். அப்போது மனிதர் செய்யமுடியாத சேஷ்டைகளைச் செய்யக் கூடிய ஸாமார்த்திய முண்டாகும். இந்த ஸாமர்த்தியத்தைக் காட்டக் கூடாது. அவனைப்பார்த்தால் மிகவும் கம்பீரமாயிருக்கும். இந்த யோகிக்கு தூக்கம் அதிகமாயிருந்தாலும் கொஞ்சமாயிருந்தாலும் எப்போதும் வருத்தமடைவதில்லை. இவனுக்கு மலம் மூத்திரம் நித்ரை இவை குறைவாகவே யிருக்கும். இதற்குப்பிறகு இவனுக்கு கிலவும், நேத்திரமலம், வாயிலிருந்து தண்ணீர் பெருகுதல், வேர்வை வாய் நாற்றம் இவை எவ்விதத்திலும் உண்டாவதில்லை. பிறகு இன்னும் அதிகம் அப்யாஸம் செய்வதால்

அதிக பலம் உண்டாகி அதனால் பூசாசித்தியுண்டாகி பூமியிலுள்ள பிராணிகளை ஜயிப்பதில் சக்தியுள்ளவனாகிறான். புலி, சரபம், யானை, கவயமிருகம், சிங்கம் இவைகளையும் இந்த யோகி கையினால் அடித்தால் இவை இறந்துவிடும். இவன் மன்மதன் போலிருப்பான். ஸ்திரீகளும் இவனது ரூபத்துக்கு ஆசைப்பட்டு இவனோடு புணரவிரும்புவார்கள். அப்போது இவன் அவர்களோடு சேர்ந்தால் இவனுக்கு இந்திரியம் நஷ்டமாகி விடும். ஆதலால் ஸ்திரீஸங்கத்தை ஒழித்து விட்டு ஆதரவோடு அப்பாஸம் செய்யவேண்டும். இவ்விதம் இந்திரியத்தைக் கட்டுவதால் யோகியினுடைய சரீரத்தில் நல்ல வாஸனையுண்டாகும். பிறகு ரஹஸ்யமாய் உட்கார்ந்து பூர்வபாபங்கள் நசிப்பதற்காக பிரணவத்தை (ஓங்காரத்தை) ப்லுதமாத்ரையோடு ஜபிக்க வேண்டும். இந்த பிரணவம் ஸகல விக்னங்களையும், தோஷங்களையும், நாசம் செய்து விடும். இவ்விதம் அப்யஸிப்பதால் ஆரம்பத்தில் ஸித்தியுண்டாகும். பிறகு வாயுவின் அப்யாஸத்தால் கடம் என்னும் அவஸ்தையுண்டாகும், பிராணம், அபானம், மனஸ், புத்தி, ஜீவாத்மா, பரமாத்மா, இவைகளுக்கு நின்றுங்கொன்று விரோதமில்லாமல் எப்போது ஐக்யம் (ஒன்றோடொன்று சேருதல்) உண்டாகிறதோ அது கடாவஸ்தை என்னப்படும். அதனுடைய அடையாளங்களைச் சொல்லுகிறேன். முன்னால் எந்த அப்பாஸம் சொல்லப்பட்டதோ அதில் கால் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும். பகலிலாவது ஸாயந்திரமாவது ஒரு யாமம் அப்யஸிக்க வேண்டும். தினந்தோறும் ஒரு தடவை கேவலம் கும்பகத்தையே செய்ய வேண்டும். யோகியானவன் கும்பகத்தை யடைந்து விஷயங்களிலிருந்து இந்திரியங்களைத் தடுத்து இழுப்பதே ப்ரத்யாஹாரம் என்னப்படும். கண்களால் பார்ப்பதையெல்

லாம், காதுகளால் கேட்பதையெல்லாம், மூக்கினால் முகர்வதையெல்லாம், நாக்கினால் ரஸமறிவதை யெல்லாம், த்வக்கினால் (தோலால்) தொடுவதையெல்லாம் யோகியானவன் ஆத்மாவென்று பாவிக்கவேண்டும். இவ்விதம் ஞானேந்திரியங்களின் ஸௌக்யங்களையும் நன்றாய் ஸாதிக்க வேண்டும். தினந்தோறும் யோகியானவன் சோம்பலில்லாமல் ஒரு யாமம் அப்யஸித்தால் அவனுக்கு நிச்சயமாய் மனதிற்கு தைர்யமுண்டாகும். அப்படியே தூரத்திலுள்ளதை கேட்கும் சக்தியும், ஒரு க்ஷணத்திற்குள் வெகுதூரம் போகும்படியான சக்தியும், சொன்ன வாக்கு பலிக்கும்படியான சக்தியும், இஷ்டப்படி ரூபத்தை யெடுத்துக் கொள்ளும் சக்தியும், தன்னை ஒருவரும் பாராமலிருக்கும்படி செய்துகொள்ளும் சக்தியும் உண்டாகும். இவனது மலமூத்திரங்களைத் தடவின மாத்திரத்தில் லோஹங்கள் ஸ்வர்ணமாகிவிடும். அடிக்கடி அப்யாஸம் செய்வதால் அந்த யோகிக்கு ஆகாசத்தில் போகும் சக்தி யுண்டாகும். யோகியானவன் தனது யோகம் ஸித்திக்கும் விஷயத்தில் எப்போதும் நிச்சிதபுத்தியுள்ளவனா யிருக்கவேண்டும். இவைகள் மஹாஸித்திக்கு விக்னங்களாகையால் இவைகளில் புத்திமான் ஆகிய யோகி ஆசைவைக்கக் கூடாது. எவனுக்கும் தனது ஸாமர்த்தியத்தைக் காட்டக் கூடாது. தனது ஸாமர்த்தியத்தை மறைக்கும் விஷயத்தில் லோகத்தில் மூடனாகவும், மூர்க்கனாகவும், செவிடனாகவும் இருக்கவேண்டும். சிஷ்யர்களும் தம் தம் கார்யங்களில் அவச்யம் ப்ரார்த்திப்பார்கள். அந்தந்தக்கார்யங்களைச்செய்வதில் பிரயாஸப்பட்டுக்கொண்டிருந்தால் தனது அப்பியாஸத்தை மறந்துவிடுவான். ஆதலால் குருவின் வாக்யத்தை மறக்காமல் இரவும் பகலும் அப்யஸிக்கவேண்டும். இவ்விதம் எப்போதும் அப்யாஸம் செய்வதால் கடம் என்னும் அவஸ்தை

யுண்டாகும். அப்யாஸமில்லாதவனுக்கு வீண் கூட்டத்தால் ஸித்திப்பதில்லை. ஆகையால் எவ்வளவு பிரயத்தனம் செய்தாவது யோகத்தையே அப்யாஸம் செய்யவேண்டும். இப்படி அப்யாஸ யோகம் ஸித்தியானபிறகு பரிசயாவஸ்தை யுண்டாகும். பிரயத்னப்பட்டு, வாயுவானது பழக்கப்பட்டு அக்னியோடு குண்டலினியை பாவித்து தடங்கலில்லாமல் ஸுஷும்னையில் பிரவேசிக்கும். வாயுவோடு சித்தமும் மஹாமார்க்கத்தில் பிரவேசிக்கும். எவனுடைய சித்தமும் வாயுவும் ஸுஷும்னையில் பிரவேசிக்குமோ அவனுக்கு பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம் இந்த ஐந்துகளில் தேவதைகளின்(யா)தாரணம் ஐந்துவிதமாய் ஏற்படுகிறது. பாதம் முதல் முழங்கால்வரை பிருதிவியின் ஸ்தானமென்னப்படும். பிருதிவி சதுரமாயும் மஞ்ஜள்வர்ணமாயும் லகார எழுத்தை யுடையதாயுமிருக்கும். பார்த்திவத்தில் லகாரத்தோடுவாயுவை யேற்றி, நான்குபுஜங்களுடன் கூடிய ஆகாரத்தை யுடையவும், நான்கு முகங்களையுடையவும் ஸ்வர்ணமயமாயும் இருக்கிற ஈச்வரனை, தியானம் செய்துகொண்டு ஐந்துநாழிகை (யா) தாரணம் செய்யவேண்டும். அப்போது பிருதிவியை ஜயிக்கும்படியான சக்தியை யடைவான். இந்த யோகிக்கு பிருதிவியின் சம்பந்தத்தால் மரணமுண்டாகாது. முழங்கால்முதல் ஆஸனம் வரையில் ஜலத்தின் ஸ்தானமென்று கூறப்பட்டிருக்கிறது. ஜலம் அர்த்தசந்திராகாரமாயும்,வெளுப்பாயும்,வம்என்பதை பீஜமாய் உடையதாயும் இருக்கிறது வகாரத்தோடுகூட வாயுவை வருணத்தில் ஏற்றி, நான்கு கைகளையுடையவும், கிரீடத்தையுடையவும், சுத்தமான ஸ்படிகத்திற்கு ஸமானமாயும், பீதாம்பரதாரியாயும், அச்யுதராயும் இருக்கிற நாராயணனை தியானம்செய்துகொண்டு ஐந்து நாழிகை தரித்துக்கொண்டிருந்தால் எல்லா

பாபங்களும் நசித்துவிடும். பிறகு ஜலத்திலிருந்து பயமில்லை. ஜலத்தினால் மரணமுமில்லை. ஆஸனம்முதல் ஹிருதயம் வரையில் அக்னியின் ஸ்தானம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அக்னி த்ரிகோணமாயும் 'ர' என்பதிலிருந்து உண்டானதாயும் இருக்கிறது. 'ர' என்பதால் பிரகாசிக்கிற வாயுவை அக்கினியில் ஏற்றி, மூன்று கண்களையுடையவராயும், வரங்களைக் கொடுக்கிறவராயும், பால ஸூர்யன்போல் பிரகாசிக்கிறவராயும், விபூதியினால் பூசப்பட்ட சரீரத்தை யுடையவராயும், மிகவும் பிரஸன்னராயுமிருக்கிற பரமேச்வரனை தியானம்செய்துகொண்டு ஐந்து நாழிகை தாரணம் செய்தால் இவன் அக்னியால் கொளுத்தப்படுவதில்லை. அக்னி மண்டலத்தில் பிரவேசித்தாலும் சரீரம் கொளுத்தப்படுவதில்லை. ஹிருதயத்திலிருந்து புருவங்களின் மத்திவரையில் வாயுவின் ஸ்தானமென்று கூறப்பட்டிருக்கிறது. வாயு ஷட்கோணமாயும், கிருஷ்ணவர்ணமாயும் யகார அக்ஷரத்தால் பிரகாசிக்கிறதாயும் இருக்கிறது. யகாரத்தால் பிரகாசிக்கும் வாயுவை வாயுஸ்தானத்தில் ஏற்றி, விச்வவ்யாபியான ஸர்வஜ்ஞனான ஈச்வரனை தியானம் செய்துகொண்டு ஐந்து நாழிகை தாரணம் செய்தால் வாயுபோல் ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் சக்தியுண்டாகும். இந்த யோகிக்கு வாயுவினிடமிருந்து பயமும் மரணமும் உண்டாவதில்லை. புருவங்களின் மத்தியம் முதல் சிரஸ்வரையில் ஆகாசத்தின் ஸ்தானம் என்னப்படும். ஆகாசம் வர்த்துலமாயும், புகைவர்ணமாயும் ஹகார அக்ஷரத்தால் பிரகாசிக்கிறதாயும் இருக்கும். ஆகாசத்தில் வாயுவை ஏற்றி, ஹகாரத்தின்மேல் பிந்து ஸ்வரூபராயும், மஹாதேவனாயும், ஆகாசரூபியாயும், ஸதாசிவராயும், சுத்தமான ஸ்படிகம் போன்றவராயும், பாலசந்திரனை சிரஸில் உடையவராயும் ஐந்து முகங்களோடு கூடியவராயும்,

பிரஸன்னராயும், பத்து கைகளையுடையவராயும், மூன்று நேத்திரங்களை யுடையவராயும், ஸகல ஆயுதங்களையும் தரித்துக்கொண்டிருக்கிறவராயும், ஸகல ஆபரணங்களையும் அணிந்துகொண்டிருக்கிறவராயும், பார்வதி தேவியை பாதிசரீரத்தில் உடையவராயும், ஸமஸ்தகாரணங்களுக்கும் காரணமாயிருக்கிற சங்கரனை தியானம் செய்து அப்படியே தரித்துக்கொண்டிருந்தால் ஆகாசத்தில் சஞ்சரிக்கும் சக்தி அவச்யமுண்டாகும். எங்கேயாவது இருந்தாலும் அந்த யோகி மிகவும் ஸுகமனுபவிப்பான் இவ்வாறு யோகியானவன் ஸாமர்த்தியமுள்ளவனாய் இருந்துகொண்டு ஐந்து தாரணைகளைச் செய்யவேண்டும். பிறகு அவனது சரீரம் மிகவும் பலமுள்ளதாயிருப்பதோடு அவனுக்கு மரணம் உண்டாவதில்லை. பிரும்மப்பிரளயம் வந்தாலும் அவன் வருத்தமடைவதில்லை. அறுபதுநாழியும் அப்படியே தியானம் செய்யவேண்டும். வாயுவை ஆகாசத்தில் நிறுத்தி இஷ்டதேவதையை தியானம் செய்வது ஸகுணதியான மென்னப்படும். இது அணிமாதி குணங்களைக்கொடுக்கும். பிறகு நிர்க்குண தியானத்தோடு கூடியவனுக்கு ஸமாதி உண்டாகும். பனிரெண்டு தினங்களுக்குள்ளேயே ஸமாதியை அடைவான். மஹா புத்தியுள்ள இவன் வாயுவைக்கட்டி ஜீவன்முக்தனாவான். ஜீவாத்மா பரமாத்மா இவைகளின் ஸமமான அவஸ்தை ஸமாதி யென்னப்படும். தனது தேஹத்தை விட்டு விடுவதற்கு இச்சையிருந்தால் தானே விட்டுவிடலாம். பரப்ரும்மத்தினிடத்தில் லயத்தையடைந்தால் அவனுக்கு உக்கிராந்தி உண்டாவதில்லை. அல்லது தனது சரீரத்தை விடுவதற்கு இஷ்டமில்லாவிட்டால் அணிமாதிகுணங்களோடு கூடியவனாக ஸகல லோகங்களிலும் ஸஞ்சரித்துக்கொண்டு ஒரு ஸமயத்தில் தனது இச்சையால் தேவனாகி ஸ்வர்க்க

லோகத்தில் பூஜிக்கப்படுகிறான். மனிதனாயிருந்தாலும் தன் இச்சையால் யக்ஷனாகிவிடுவான். சிங்கம், புலி, யானை, குதிரை இவைகளும் இவனது இச்சையால் கௌரவத்தை யடையும். இந்த யோகி இஷ்டப்படி யிருப்பான். அல்லது யோகியே மஹேச்வரன், அப்யாஸ பேதத்தால் இவர்களுக்கு பேதம் உண்டாகிறது. பலன் ஸமமானதே. இடது காலினுடைய குதியை ஆஸனஸ்தானத்தில் சேர்க்கவேண்டும். வலதுகாலை நீட்டி இரண்டு கைகளால் நன்றாய்த் தரிக்கவேண்டும். மோவாக்கட்டையை ஹிருதயத்தில் வைத்து மறுபடியும் வாயுவினால் நிறப்பவேண்டும். கும்பகத்தால் சக்திக்குத் தக்கபடி தரிக்கும்படிசெய்து வெளியில் விடவேண்டும். இடது பக்கத்தால் அப்யஸித்து, பிறகு வலது புறத்தால் அப்யஸிக்கவேண்டும். எந்த பாதம் நீட்டப்பட்டிருக்கிறதோ அதைத் தொடையின்மேல் வளைக்கவேண்டும். இதுவே மஹாபந்தமென்பது. இரண்டு விதத்திலும் இதை அப்யஸிக்கவேண்டும். மஹாபந்தத்திலிருக்கும் யோகியானவன் ஸ்திரமனமுள்ளவனாய்ப் பூரகத்தைச்செய்து வாயுவினால் கதியைச் சுற்றிக்கொண்டு சலிக்காமல் கர்ணமுத்ரையினால் இரண்டு புடங்களையும் தாண்டினால் அப்போது வேகமாய் வாயு சலிக்கும். மஹாவேதம் என்னும் இதுவே எப்போதும் ஸித்தர்களால் அப்யாஸம் செய்யப்படுகிறது. கபாலத்தின் உள்ளேயிருக்கும் துவாரத்தில் நாக்கைத்திருப்பி தரித்துக்கொள்ளவேண்டும். புருவங்களின் மத்தியில் திருஷ்டியை உடைய இதுவும் (வ) கேசரீ என்னும் முத்ரையாகும். கழுத்தை வளைத்துக்கொண்டு ஸ்திரமான புத்தியோடு ஹிருதயத்தில் வைக்கவேண்டும். இது ஜாலந்தர பந்தம் எனப்படும். மரண மாகிய யானைக்கு இது சிங்கமாகும். ஸுஷும்னையில் கட்டப்பட்ட பிராணன் எதனுல்

உயரப்பறக்கின்றதோ; அது உட்யாணபந்தம் என்று யோகிகளால் சொல்லப்படுகிறது. குதிகாலை மடக்கி யோனியைகெட்டியாய் வளைக்கவேண்டும். பிறகு அபானத்தை உயர ஏற்றினால் இது யோநிபந்தம் என்னப்படும். பிராணம், அபானம், நாதம், பிந்து இவைகள் மூலபந்தத்தோடு ஒன்றுப்சேர்ந்து யடைந்து யோகத்தின் ஸித்தியைக் கொடுக்கின்றன. இவ்விஷயத்தில் ஸந்தேஹமில்லை விபரீதம் என்று பெயரையுடைய கரணி ஸகல வியாதிகளையும் நாசம் செய்யும். நித்யம் அப்பியாஸமுடையவனுக்கு ஜாடராக்னியை விருத்திசெய்யும். அர்தஸாதகனுக்கு ஆகாரம் அதிகம் தேடவேண்டும். ஆகாரம் அல்பமாயிருந்தால் ஜாடராக்னி க்ஷணத்திற்குள் தேஹத்தைத் தின்றுவிடும். முதல் தினத்தில் ஒரு க்ஷணகாலம் தலைகீழும் கால் மேலுமாயிருக்கும். ஒவ்வொரு க்ஷணமும் கொஞ்சங் கொஞ்சம் அதிகமாய் அப்யஸிக்கவேண்டும். தேஹத்தில் கிழத்தனம் சுருக்கம் இவை மூன்றுமாதத்திற்குப் பிறகு தென்படுவதில்லை. நித்யம் ஒருயாமம் அப்யாஸம் செய்கிறவன் காலனை ஜயித்து விடுவான். வஜ்ரோலியை அப்யாஸம் செய்யும் யோகியானவன் ஸகல ஸித்திகளையும் பெறுவான். எவனுக்கு யோகஸித்திகிடைத்து கையிலிருக்கிறதோ அவன் சென்றது வரப்போகிறதுகளை அறிவான். நிச்சயமாய் ஆகாசத்தில் சஞ்சரிப்பவனாவான். தினந்தோறும் நஸ்யத்தைச் செய்துகொண்டு அமரியை பானம் செய்பவன் வஜ்ரோலியை அப்யாஸம் செய்ய வேண்டும். அது அமரோலி என்னப்படும். பிறகு ராஜயோகம் உண்டாகும். மத்தியில் உண்டாகாது. யோகிகளுக்கு ராஜயோகத்தால் காரியங்கள் முடிந்தால் அப்போது யோகிக்கு விவேகம் வைராக்யம் உண்டாகும். விஷ்ணுவென்று ப்ரஸித்தமான மஹா யோகியானவர் மஹா

த்மாவாயும் மஹாதவத்தை யுடையவராயும் இருந்துகொண்டு தத்வமார்க்கத்தில் தீபம்போல் பிரகாசிக்கிறார்.

முன்னால் பானம் பண்ணப்பட்ட ஸ்தனத்தைக் கசக்கி ஆனந்தமடைகிறான். எந்த யோனியிலிருந்து முன் உண்டானனோ அந்த யோனியில் ரமித்துக்கொண்டு இருக்கிறான். தாயே மறுபடியும் பத்னி. பத்னியே மறுபடியும் தாய். தகப்பனாய் இருந்தவன் மறுபடியும் பிள்ளை. பிள்ளையாயிருந்தவன் மறுபடி தகப்பன். இவ்வாறு ஸம்ஸாரசக்ரத்தினால் கிணற்று சக்ரத்தில் குடங்கள்போல் அநேக யோனிகளில் சுழண்டுகொண்டு இருக்கிறவர்கள் இதைக் கேட்டால் நல்ல லோகங்களை அடைகிறார்கள். லோகங்கள், வேதங்கள், ஸந்திகள், ஸ்வரங்கள், அக்னிகள், குணங்கள் ஆகிய இவையெல்லாம் மூன்றாயிருப்பதோடு மூன்று அக்ஷரத்தில்(பிரணவத்தில்) இருக்கின்றன. இந்த மூன்று அக்ஷரங்களுக்குள் அரை அக்ஷரத்தைபாவது படிப்பவன் ஸத்யமான பரம்பொருளை அடைகிறான். பூவின் மத்தியில் வாஸனைபோலவும், பாலின் மத்தியில் நெய் போலவும், எள்ளின் மத்தியில் எண்ணைபோலவும், கல்லின் மத்தியில் ஸ்வர்ணம் போலவும் ஹ்ருதய ஸ்தானத்தில் கமலம் இருக்கின்றது. அதன் முகம் கீழ்நோக்கியது. உயரத்தண்டை யுடையவும் கீழே பிந்துவை யுடையவுமான மனம் அதன் மத்தியிலிருக்கிறது. அகாரத்தால் ரேசனம் செய்யப்பட்ட பத்மம் உகாரத்தால் மலருகிறது. மகாரத்தில் நாதத்தை யடைகிறது. அர்த்தமாத்ரை சலிக்காதது. யோகத்துடன் கூடின மனதையுடைய புருஷன் சுத்தமான ஸ்படிகத்திற்கு ஸமானமாயும், நிஷ்களமாயும், பாவங்களைப் போக்கடிக்கிறதாயும் இருக்கிறபரம் பொருளை யடைகிறான். ஆமையானது தனது கைகால் தலை இவைகளைத் தன்னிடம்

தரித்துக்கொள்ளனும். இந்தமாதிரி ஸகல த்வாரங்களிலும் வாயுவை நிறைத்து வெளியில் விட்டு மூச்சுவிட்டுக்கொண்டிருக்கவேண்டும். குடத்தின் மத்தியிலிருக்கும் தீபம் போல் சலிக்காமலிருப்பதே கும்பகம் என்னப்படும். ஜனங்களில்லாமலும் உபத்ரவமில்லாமலும் இருக்கிற இடத்தில் ஒன்பது த்வாரங்களையும் தடுத்துக்கொண்டு யோகத்தை ஸேவிப்பதால் ஸ்வாத்மமாத்ரமாக சேவித்துவிடலாம் என்பது நிச்சயம். என்று உபநிஷத்.

ஸஹநாவவது + சாந்தி:

ஓம். உபநிஷத் தத்ஸத்

யோகதத்வோபநிஷத் முற்றிற்று.

ஸ்ரீ

5

ஸாமவேதத்தில்

ஸந்யாஸோபநிஷத்.

ஆப்யாயந்து + சாந்தி:.

ஓம். ஸந்யாஸோபநிஷத்தை வியாக்யானம் செய்கிறோம். எவன் ஆச்ரமக்கிரமமாய் ஸந்யாஸம் வாங்கிக்கொள்ளுகிறானோ அவன் ஸந்யாஸி ஆகிறான். எது ஸந்யாஸம் என்று சொல்லப்படும்? எப்படி ஸந்யாஸி ஆகிறான்? ஒருவன் கர்மானுஷ்டானங்களால் தன்னை ரக்ஷித்துக்கொண்டு பிறகு தாய் தந்தை பத்னி பிள்ளைகள் பந்துக்கள் ஆகிய இவர்களை ஸந்தோஷப்படுத்தி இவர்களது உத்திரவு

வாங்கிக்கொண்டு இவனுடைய ஸகல ரித்விக்குக்களையும் முன்போல் வரித்து வைச்வாநரேஷ்டியைச்செய்யவேண்டும். ஸர்வஸ்வத்தையும் கொடுக்கவேண்டும். ரித்விக்குகளைக்கொண்டு தனது அங்கங்களை ஸகலபாத்திரங்களிலும் ஆரோபணம் செய்து, ஆஹவனீயம், கார்ஹபத்யம், அந்வாஹார்யபசனம், ஸப்யம், ஆவஸத்யம் என்னும் அக்னிகளில் பிராணம், அபானம், வியானம், உதானம், ஸமானம் என்னும் எல்லா பிராணன்களையும் ஆரோபணம் செய்யவேண்டும். சிகையோடு மயிரை க்ஷவரம் செய்துகொண்டு யஜ்ஞோபவீதத்தை அறுத்துவிட்டு பிள்ளையைப்பார்த்து 'நீ பிரும்மா, நீ யஜ்ஞம், நீ எல்லாம்' என்று மந்திரம் சொல்லவேண்டும். பிள்ளையில்லாமலிருந்தால் தன்னையே இவ்வாறு தியானம் செய்துகொண்டு, திரும்பிப்பாராமல் கிழக்கு திக்கிலாவது, வடக்கு திக்கிலாவது போகவேண்டும். மூன்று வர்ணங்களிலும் பிக்ஷைக்குப் போகலாம். கையாகிய பாத்திரத்தினால் ஆஹாரம் செய்யலாம். ஔஷதம் போல் ஆஹாரத்தைச் சாப்பிடவேண்டும். கொழுப்பு ஏறாமல் பிராணன் தரிப்பதற்கு மாத்திரம் கிடைத்தவரையில் சாப்பிடவேண்டும். மெலிந்தவனாய் ஆகி கிராமத்தில் ஒரு ராத்ரியும் நகரத்தில் ஐந்து ராத்ரியும் வஸிக்கவேண்டும். மழைகாலத்தில் நான்கு மாதம் கிராமத்திலாவது நகரத்திலாவது வஸிக்கலாம். பக்ஷங்களே மாதங்கள் என்னும் சாஸ்திரப்படி இரண்டுமாதமாவது வஸிக்கவேண்டும். கிழிந்த துணியையாவது மரவுரியையாவது கட்டிக்கொள்ளவேண்டும். கஷ்டப்பட்டு தபஸ் செய்வதில் அசக்தனாய் இருந்தால் ஒழிய வேறொன்றையும் ஸ்வீகரிக்கக்கூடாது. எவன் இவ்வாறு கிரமமாய் ஸந்யாஸம் செய்துகொள்ளுகிறானோ எவன் இவ்விதம் பார்க்கிறானோ அவன் ஸந்யாஸி

ஆகிறான். இவனுக்கு யஜ்ஞோபவீதம் ஏது? சிகை ஏது? ஆசமனம் ஏது? ஆத்மத்யானமே இவனுக்கு யஜ்ஞோபவீதம். வித்தை சிகை. எங்குமிருக்கும் ஜலங்களால் கார்யத்தை முடித்துக்கொண்டு வயிறையே பாத்ரமாய் அடைந்து ஜலதீரத்தில் வஸிப்பான். ஸூர்யன் அஸ்தமனமானால் இவனுக்கு ஆசமனம் எவ்விதம்? பகலில் எவ்விதமோ அவ்விதமே இரவிலும். இவனுக்கு இரவுமில்லை, பகலுமில்லை. இதுவும் பின் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. இவனுக்கு எப்போதும் பகலாகவேயிருக்கிறது. இவ்விதம் தெரிந்துக்கொள்ளுகிறவன் இந்தஜ்ஞானத்தால் ஆத்மானுஸந்தானம் செய்கிறான்.

முதல் அத்தியாயம் முற்றிற்று.

ஓம். நாற்பது ஸம்ஸ்காரங்களோடு கூடியவன் எல்லா விஷயங்களிலும் வைராக்யத்தை யடைந்து சித்த சுத்தியை யடைந்து ஆசை, அஸூயை, ஈர்ஷை, அஹங்காரம் இவைகளைக் கொளுத்திவிட்டு ஸாதனசதுஷ்டயத்தோடு கூடினவனே ஸந்யாஸம் செய்துகொள்ளுவதற்கு யோக்யனாகிறான். எவன் ஸந்யாஸத்தில் நிச்சயம் செய்துவிட்டு மறுபடி ஸந்யாஸம் செய்துகொள்ளவில்லையோ அவன் கிருச்ச்ரத்தை மாத்திரம் செய்துகொண்டு மறுபடி ஸந்யாஸத்தை அடையவேண்டும். ஸந்யாஸியை பதனம் அடையும்படி செய்கிறவனும் பதிதனுக்கு ஸந்யாஸம் கொடுப்பவனும், ஸந்யாஸத்திற்கு விக்னம் செய்கிறவனும் ஆகிய இம்மூவர்களையும் பதிதரென்றே அறிந்துகொள்ளவேண்டியது. பிறகு நபும்ஸகன், பதிதன், அவயவம் குறைந்தவன், ஸ்த்ரைணன், செவிடன், குழந்தை, ஊமை, பா

ஷண்டன், சக்ரதாரி, லிங்கதாரி, குஷ்டரோக முடைய
வன், விஷ்ணுபூஜைசெய்பவன், சிவபூஜை செய்கிறவன்,
சம்பளத்திற்கு அத்யயனம் சொல்லிக்கொடுக்கிறவன், வழு
க்குத்தலையுடையவன், அக்னியில்லாதவன், நாஸ்திகன்
ஆகிய இவர்கள் வைராக்யமுள்ளவர்களாயிருந்தபோதிலும்
ஸந்யாஸத்திற்கு யோக்யமானவர்களல்ல. அல்லது ஸந்யா
ஸம் வாங்கிக்கொண்டாலும் மஹாவாக்யத்தின் உபதேச
த்திற்கு அதிகாரிகள் அல்ல. மேலானஜாதியிலிருந்து
பதிதன் ஆனவனுடைய பிள்ளையும், சொத்தை நகம், சொ
த்தைப்பல் உள்ளவனும், மதம்பிடித்தவனும், அப்படியே
அங்கம் குறைந்தவனும், ஸந்யாஸம் அடைவதற்கு யோ
க்யன் ஆகமாட்டான். ஸந்யாஸத்திலிருந்து வேறு ஆச்ரம
த்தைத் திரும்பி அடைந்தவர்களுக்கும், அப்படியே மஹா
பாதகம் உடையவர்களுக்கும், ஸம்ஸ்காரம் குறைந்தவர்க
ளுக்கும், நிந்திக்கப்பட்டவர்களுக்கும், ஸந்யாஸத்தை செய்
யக்கூடாது. விரதம், யஜ்ஞம், தபஸ், தானம், ஹோமம்,
வேதாத்யயனம், ஸத்யம், சௌசம், இவைகள் இல்லாதவ
னுக்கு ஸந்யாஸத்தை செய்யவே கூடாது.

இவர்களுக்கு ஆதுரஸந்யாஸமே யொழிய க்ரமஸந்
யாஸம் கிடையாது. ஓம் பூஸ்ஸ்வாஹாவென்று சிகையை
ப்பிடுங்கி "யஜ்ஞோபவீதம்" என்னும் மந்திரத்தால்
யஜ்ஞோபவீதத்தை அறுத்துவிட்டு ஓம் பூஸ்ஸ்வாஹா
வென்று வஸ்திரத்தையும் அரைஞாணையும் ஜலத்தில் எறி
ந்துவிட்டு 'என்னால் ஸந்யாஸம் செய்துகொள்ளப்பட்டது'
என்று மூன்று தடவை மந்திரம் சொல்லவேண்டும். ஸந்
யாஸம் செய்துகொண்ட பிராமணனைப்பார்த்து 'இவன்
என்னு பிண்டலத்தைப் பிளந்துகொண்டு பரப்பிரும்மத்தை

அடைகிறான்' என்று ஸூர்யன் தனது ஸ்தானத்திலி
ருந்து சலிக்கிறான். ஸந்யாஸம் செய்துகொள்ளப்பட்ட
தென்று சொல்லுகிறவன் சென்ற அறுபது குலங்களை
யும் வரப்போகிற அறுபது குலங்களையும் கரையேற்று
கிறான். வம்சஸம்பந்தமான தோஷங்களையும் தேஹஸம்ப
ந்தமான தோஷங்களையும் ப்ரைஷமாகிய அக்னியானது
உமியிலுள்ள அக்னியானது ஸ்வர்ணத்தைப்போல கொ
ளுத்திவிடுகிறது. ஸகாமா என்னும் மந்திரத்தால் தண்
டத்தை ஸ்வீகரிக்கவேண்டும். தண்டமானது மூங்கில்
ஸம்பந்தமாயும், அழகாயும், தோலோடுகூடியதாயும் ஸம
மான கணுக்களையுடையதாயும், பரிசுத்தமானவிடத்தில்
உண்டானதாயும் தோஷங்களெல்லாம் நீங்கியதாயும், கொ
ளுத்தப்படாததாயும், புழுக்களால் துளைக்கப்படாததாயும்
கணுக்கள் வரம்புகளால் பிரகாசிக்கிறதாயும் இருக்கவே
ண்டும். ஸந்யாஸியானவன் இப்படிப்பட்ட தண்டத்தை
மூக்களவாவது, தலையளவாவது, புருவங்களின் அளவா
வது தரிக்கவேண்டும். எப்போதும் தண்டம் ஆத்மா
இவைகளின் ஸம்யோகமே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
புத்திசாலியான ஸந்யாஸி தண்டமில்லாமல் பாணத்தை
விட்டெறியும் தூரமவ்வளவுகூட போகக்கூடாது.

ஜகஜ்ஜீவனம் என்னும் மந்திரத்தால் கமண்டலுவை
ஸ்வீகரித்துக்கொண்டு யோகபட்டத்தில் அபிஷேகம் பண்
ணப்பட்டவனாய் ஆத்ம ஸுகமாய் ஸஞ்சரிக்கவேண்டும்.
தர்மம், அதர்மம் இவைகளைவிட்டுவிடு. ஸத்யம், அஸத்
யம் இவ்விரண்டையும் விட்டுவிடு. ஸத்யம், அஸத்யம்
இவ்விரண்டையும் விட்டுவிட்டு. இவைகளை விடும் மனதை
யும் விட்டுவிடு, வைராக்கிய ஸந்யாஸி, ஞான ஸந்யாஸி,

ஞான வைராக்ய ஸந்யாஸி, கர்மஸந்யாஸி என்று நான்கு விதம். அது எவ்விதமென்றால் பார்த்து அனுபவிக்கப்பட்ட விஷயங்களில் வைராக்யத்தை யடைந்து முன்ஜன்ம புண்யகர்ம விசேஷங்களால் ஸந்யாஸம் அடைந்தவன் வைராக்ய ஸந்யாஸி.

சாஸ்திரஜ்ஞானத்தால் பாபம், புண்யம் உலக அனுபவம் இவைகளைக்கேட்டு உலகத்திலிருந்து ஒழிவையடைந்து தேஹவாஸனை, சாஸ்திரவாஸனை, லோகவாஸனை இவைகளை விட்டு ஸகலப்ரவ்ருத்திகளையும் வாந்திபண்ணின அன்னம்போல் அல்பமாய் எண்ணி ஸாதனசதுஷ்டயத்தோடு கூடினவனாய் எவன் ஸந்யாஸம் அடைகிறானோ அவனே ஞானஸந்யாஸி. க்ரமமாய் எல்லாவற்றையும் அப்யஸித்து அனுபவித்து ஞானம், வைராக்யம் இவைகளால் ஸ்வரூபத்தை த்யானம் செய்துகொண்டு தேஹமாத்திரமுள்ளவனாய் ஸந்யாஸம் செய்துகொண்டு பிறந்த மாதிரியே யிருக்கிறவன் ஞானவைராக்யஸந்யாஸி. ப்ரும்மசர்யத்தை முடித்துவிட்டு க்ருஹஸ்தனாகி பிறகு வானப்ரஸ்தாச்ரமத்தை யடைந்து வைராக்யமில்லாவிட்டாலும் ஆச்ரமக்ரமமாய் ஸந்யாஸம் அடைகிறவன் கர்மஸந்யாஸி, அந்த ஸந்யாஸம் குடீசக, பஹூதக, ஹம்ஸ, பரமஹம்ஸ, துரீயாதீத, அவதூதம் என்று ஆறுவிதப்படும்.

குடீசகன் சிகை யஜ்ஞோபவீதம் தண்டம் கமண்டலு கௌபீனம் ஸ்நானவஸ்திரம் கந்தை இவைகளைத் தரித்துக்கொண்டு மாதா பிதா குரு இவர்களை ஆராதித்துக்கொண்டு கூடை மண்வெட்டி காவடிமுதலிய ஸாதனங்களை யடைந்து ஒரே இடத்தில் அன்னம் சாப்பிட்டுக்கொண்டு வெள்ளை ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்துக்

கொண்டு மூன்று தண்டம் உடையவனுயிருப்பான். பஹூதகன் சிகை கந்தை முதலியவைகளை தரித்துக்கொண்டு திரிபுண்ட்ரத்தை தரித்துக்கொண்டு குடீசகன்போல் எல்லாவற்றிலும் ஸமனுய் மதுகர (வண்டின்) விருத்தியையடைந்து எட்டு கவளங்களை சாப்பிடுவான். ஹம்ஸன் ஜடையை தரித்துக்கொண்டு திரிபுண்ட்ரம் அல்லது ஊர்த்துவபுண்ட்ரத்தை தரித்துக்கொண்டு நிச்சயமில்லாமல் மதுகரவிருத்தியால் அன்னத்தை சாப்பிட்டுக்கொண்டு கௌபீனம் தண்டம் இவைகளைத் தரித்துக்கொண்டிருப்பான். பரமஹம்ஸன் சிகை யஜ்ஞோபவீதம் இல்லாமல் ஐந்து வீடுகளில் கரபாத்திரத்தால் சாப்பிடுகிறவனுயும் ஒரு கௌபீனத்தையும் ஒருவஸ்திரத்தையும் ஒரு மூங்கில் தண்டத்தையும் தரித்துக்கொண்டு விபூதியை உத்தூளனம்செய்து (பூசிக்) கொண்டு எல்லாவற்றையும் விட்டவனுக இருப்பான். துரீயாதீதன் கோமுகவிருத்தியால் பழங்களை சாப்பிட்டுக்கொண்டு அன்னம் சாப்பிடுவதானல் மூன்று வீடுகளில் சாப்பிட்டுக்கொண்டு தேஹம் மாத்திரம் உடையவனுய் வஸ்திரமில்லாமல் தேஹவ்ருத்தியை நடத்திக்கொண்டு பிணம்போலிருப்பான். அவதூதன் ஒரு நியமமுமில்லாமல் பதிதன் அபிசஸ்தன்: இவர்களை மாத்திரம் விட்டுவிட்டு எல்லா ஜாதிகளிலும் மலைப்பாம்பு போல் ஆஹாரம் சாப்பிட்டுக்கொண்டு ஸ்வரூபத்யானம் செய்துகொண்டிருப்பான்.

நான், விருக்ஷம், திருணம், பர்வதம் இவைகளோடு கூடின இந்த ஜகத் அல்ல. ஸர்வவியாபகனுன நான் மிகவும் ஜடமானவெளிப்படையான பதார்த்தமாய் எப்படியிருக்கமுடியும். நான் அல்பகாலத்தில் நாசமடையக்கூடிய அசேதனமான தேஹம் அல்ல. நான் ஏற்படுத்தப்படு

கிற க்ஷணத்திலுள்ள ஜடமான காதுதுவாரத்தால் கிரஹிக்கப்படுகிறதாயும் சூன்யமான ஆகிருதியையுடையதாயும் சூன்யத்திலிருந்து உண்டாகிறதாயும் அசேதனமாயும் இருக்கிற சப்தமல்ல. நான் க்ஷணத்தில் நாசமடைகிற தோலால் அடையக்கூடியதாயும் அடையக்கூடாததாயும் சித்பிரஸாதத்தால் தெரிந்துகொள்ளக் கூடியதாயும் அசேதனமாயும் இருக்கிற ஸ்பர்சமல்ல, நான் சஞ்சலமாயும் சஞ்சலமான ஸத்தையுடையதாயும் இருக்கும் நாக்கினால் அறியக்கூடியதாயும் துச்சமானதாயும் அல்பமான பரவுதலையுடையதாயும் திரவ்யத்தில் இருக்கக்கூடியதாயும் அசேதனமாயும் இருக்கிற ரஸமல்ல. நான் திருச்யம் தர்சனம் இவைகளில் மறைந்ததாயும் ஒரு க்ஷணத்தில் நாசமடையக்கூடியதாயும் கேவலமான த்ரஷ்டாவி (பார்க்கிறவ)னிடம் க்ஷயமடைகிறதாயும் அசேதனமாயும் இருக்கிற ரூபமல்ல. நான் கந்தத்தில் ஜடமாயும் நாசமடையக்கூடியதாயும் மூக்கினால் ஏற்படுத்தப்படுகிறதாயும் அல்பமாயும் நிச்சயமான ரூபத்தையுடையதாயும் அசேதனமாயும் இருக்கிற கந்தம் அல்ல.

ஆனால் நான் அஹங்காரமற்றவனாயும் மனமில்லாதவனாயும் சாந்தனாயும் ஐந்து இந்திரியங்களின் ஸம்சயம் நீங்கியவனாயும் சுத்தசேதனத்தை யுடையவனாயும் சைத்யமற்ற சின்மாத்திரமாயும் பிரகாசப்படுத்துகிறவனாயும் உள் வெளி இவைகளில் வியாபிக்கிறவனாயும் நிஷ்கலமாயும் நிரஞ்சனமாயும் விகல்பமற்ற சித்தின் ஆபாஸமாயும் எங்கும் வியாபிக்கிறதாயும் இருக்கிற ஒரே ஆத்மாவாயிருக்கிறேன். சேதனமான என்னாலேயே ஸூர்யன்வரையிலுமுள்ள கடம் படம் முதலிய பதார்த்தங்களெல்லாம் தீபத்தின் பிரகா-

சத்தால்போல் பிரகாசப்படுத்தப்படுகின்றன. உள்ளே பிரகாசிக்கும் தேஜஸ்ஸால் நெருப்புப்பொறிகளின் வரிசைகள்போல் விசித்ரமான இந்த இந்திரியவிருத்திகளெல்லாம் என்னாலேயே பிரகாசிக்கின்றன. அனந்தமான ஆனந்தபோகத்தை யுடையதாயும் விசேஷமான சாந்தத்தால் பிரகாசிக்கிறதாயும் சுத்தமாயும் சின்மயமாயும் இருக்கிற இந்த திருஷ்டி எல்லா திருஷ்டிகளைக்காட்டிலும் மேலானதாய் இருக்கிறது.

எல்லாருடைய மனதினுள்ளும் இருக்கிறவனும், சைத்யத்தால் விடப்பட்ட சித்ஸ்வரூபனும், ப்ரத்யக்சைதன்யஸ்வரூபனும் இருக்கிற எனக்கே நமஸ்காரம். விகாரமற்றதாயும், ஸமமானதாயும், காலகலனமற்றதாயும் இருக்கிற சித்தினால் விசித்ரமாயும், சுத்தமாயும் இருக்கிற சக்திகள் ஸமமாய் செய்யப்படுகின்றன. மூன்று காலங்களையும் உபேக்ஷிக்கிறதாயும், சைத்யத்தின் பந்தமற்றதாயும், சைத்யத்தை உபேக்ஷிக்கிறதாயும் இருக்கும் சித்தினுடைய ஸமமே பாக்கியிருக்கிறது. அது வாக்குக்கெட்டாததால் சாச்வதமான அஸத்தையைப்போல் ஆத்மாவல்லவென்றும், சித்தாந்த அவஸரத்தை அடைந்த பிறகே சேஷிக்கின்றது. அந்தரங்கத்தில் எந்த சித்தானது இச்சை, த்வேஷம் என்னும் மலங்களால் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ அது கயிறால் கட்டப்பட்ட பக்ஷிபோல் தானே உண்டாவதற்கு சக்தியுள்ளதல்ல. ஜந்துக்கள் இச்சை, த்வேஷம் இவைகளிலிருந்து உண்டான த்வந்த்வத்தின் மோஹத்தினால் பூமியின் துவாரங்களில் மறைந்து கிடக்கும் புழுக்களுக்கு ஸமமாய் ஆகிவிடுகின்றன. குறைவற்ற சிதாத்மாவான எனக்கு நமஸ்காரம். பராமர்சம் செய்யப் பட்டிருக்கிறேன், அடையப் பட்டிருக்கிறேன்,

வெகுசீக்கிரத்தில் உண்டாயிருக்கிறேன். விகல்பங்களிலிருந்து விடுபட்டிருக்கிறேன்.

நான் யாராயிருந்தாலும் எனக்கு நமஸ்காரம். அனந்தனாயிருக்கிற உனக்கும் எனக்கும் நமஸ்காரம். சித்ஸ்வரூபனான உனக்கும் எனக்கும் நமஸ்காரம். பரமேச்வரனான உனக்கு நமஸ்காரம். சிவனான எனக்கு நமஸ்காரம். நின்றுகொண்டிருந்தாலும் உட்காருவதில்லை. போகிறவனாயிருந்தாலும் போவதில்லை. சாந்தனாயிருந்தாலும் வ்யவஹாரத்திலிருப்பான். கார்யங்களை செய்கிறவனாயிருந்தாலும் ஸம்பந்தப்படுவதில்லை. எல்லாருடைய சரீரமாகிற பத்மத்தின் மத்யத்திலுள்ள வஸ்துவானது மிகவும் ஸுலபமாய் அடையக்கூடியதாயும், பிரியமான பந்துக்கள் போல் நன்றாய் அறியக்கூடியதாயும் இருக்கிறது. எனக்கு போகங்களை அடைவதிலும், போகங்களை விடுவதிலும் இச்சையில்லை. வருவது வரட்டும். போவது போகட்டும். மனதால் மனம் நாசத்தை யடைந்து அஹங்காரமில்லாமலிருக்கும்போதும், எண்ணத்தால் எண்ணம் அழிந்தபோதும், கேவலனாயும் ஸ்வஸ்தனாயும் இருக்கிறேன். எண்ணமற்றதாயும், அஹங்காரமற்றதாயும், மனமில்லாததாயும், இச்சையற்றதாயும் இருக்கிற எனது சித்தம் கேவலம் சலிக்காமலிருக்கிற சுத்தமான ஆத்மாவிலேயே நின்றுகொண்டிருக்கிறது. அஹங்காரமில்லாமை என்னும் பக்ஷியானது எனது சரீரமாகிய கூட்டிலிருந்து பேராசையாகிய கயிறுகளின் கட்டுக்களை அறுத்துவிட்டு எங்கே பறந்து போயிற்றோ அறியேன்.

எவனது எண்ணம் அஹங்காரமற்றதோ? எவனது புத்தி கார்யங்களில் ஸம்பந்தப் படுவதில்லையோ, எவன் ஸகல பிராணிகளிடமும் ஸமமாயிருக்கிறானோ? அவன் வாழ்

நாள் சோபிக்கின்றது. எவன் உள்ளம் குளிர்ந்து ராகவேஷமற்றதாயுள்ள புத்தியினால் இவ்வுலகை சாக்ஷிபோல் பார்க்கிறானோ? அவனது வாழ்நாள் பிரகாசிக்கிறது. விடவேண்டியது ஸ்வீகரிக்கவேண்டியது இவைகளை விட்டுவிடுகிற எவனால் நன்றாக அறிந்துகொண்டு சித்தத்தில் சித்தம் அர்ப்பணம் பண்ணப்படுகிறதோ? அவனது வாழ்நாள் பிரகாசிக்கிறது. அடையப்படுவது அடைகிறவன் என்னும் ஸம்பந்தமானது க்ஷயமடைந்ததும் மிகவும் சாந்திபுண்டாகிறது அந்த சாந்தி ஸ்திதியை யடைந்ததால் அதற்கு மோக்ஷமென்று பெயர். ஜீவன்முக்தர்களுடைய சித்தத்தில் வறுக்கப்பட்ட விதைக்கு ஸமானமாயும், மறுபடி ஜன்மத்தின் முளையற்றதாயும், சுத்தமாயும் இருக்கிற வாஸனையிருக்கிறது. அது பரிசுத்தமாயும், மிகவும் உதாரமாயும், சுத்தமான ஸத்வத்தை அநுஸரிக்கிறதாயும், ஆத்மத்யான ஸ்வரூபமாயும், நித்யமாயும், ஸுஷுப்தியில் உள்ளதுமாதிரியாயும் இருக்கிறது. சித்தமற்ற சேதனம் ப்ரத்யக்சேதனம் என்னப்படும். அது மனமற்ற ஸ்வபாவமானதால் அதில் கலனையின் ஸம்பந்தம் உண்டாவதில்லை. மனம் நாசமடைவதே. அது ஸத்யம். சிவம், பரமாத்ம அவஸ்தை. எல்லாமறிந்த தன்மை. அதுவே மேலான ஸந்தோஷம்.

ஊறிக்கொண்டும், விட்டுக்கொண்டும், எடுத்துக்கொண்டும், கண்களைமூடிக்கொண்டும், திரிந்து கொண்டும், மனத்தாலுண்டாகும் ஆனந்தத்தை விட்டு விட்டு நான் ஞானஸ்வரூபனாகவே யிருக்கிறேன். அறியக் கூடிய மலத்தை விட்டு விட்டு, மனதையும் மிகவும் வேறோடு அறுத்துவிட்டு, ஆசைகளாகிய பாசங்களை நன்றாய் அறுத்து விட்டு, நான் ஞானஸ்வரூபனாகவே யிருக்கிறேன். அரூபமாயும், ரூபமாயும்,

இருக்கிற ஸங்கல்பமில்லை. மிகவும் சாந்தனுமிருக்கிறேன். இஷ்டமாயும் அனிஷ்டமாயுமுள்ள எண்ணத்தையுடையவனுயும் ஞானஸ்வரூபனுமிருக்கிறேன். நான் வேறொருவன் என்னும் எண்ணத்தை விட்டு விட்டு, லோகமர்யாதையில் பற்று இல்லாதவனாய் வஜ்ரத்தூண்போல் ஆத்மாவை அவலம்பித்துக்கொண்டு, ஸ்திரமாயிருக்கிறேன். நான் இச்சாதோஷங்களால் விடுபட்டவனும், நன்மை தீமை பற்றவனும் இருந்து கொண்டு, நிர்மலமாயும், ஆசையற்றதாயும் இருக்கிற ஆத்மஞானத்தில் இருந்து கொண்டிருக்கிறேன். ஸ்வப்ரகாச ஸ்தானத்தில் இருந்து கொண்டு, எப்பொழுது ஆத்மானந்தத்தை அடையப்போகிறேன். மனம் அடங்கியவனுமிருந்து கொண்டு, பர்வதகுகையில் நிர்விகல்பஸமாதியால் எப்பொழுது சிலைக்கு ஸமமாய் ஆகப் போகிறேன். நிரம்சத்பானத்தால் ஊமையாயிருக்கிற எனது தலையில் காட்டிலுள்ளபக்ஷிகள் எப்போது கூடுகட்டப் போகின்றன. ஸங்கல்பமாகிய மரங்களையும், பேராசையாகிய கொடிகளையுமுடைய மனதாகிய வனத்தை நாசம் செய்து விட்டு, விஸ்தாரமான பூமியையடைந்து ஸுகமாய் எப்பொழுது விளையாடுவேன். உயர்ந்தஸ்தானத்தையடைந்து விட்டேன். கேவலனுமிருக்கிறேன். நான் ஜயிக்கிறவனும், நிர்வாணமடைந்தவனும், இச்சையற்றவனும், நிரம்சனும், அடையவேண்டியதற்றவனும் இருக்கிறேன். ஸ்வச்சமாயிருப்பது. ஊர்ஜிதமாயிருப்பது, ஸத்தை ரமணீயமாயிருப்பது, ஸத்யமாயிருப்பது, ஞானியாயிருப்பது. ஆனந்தமடைந்திருப்பது, சாந்தியடைவது, எப்போதும் ஸந்தோஷமடைவது, பூர்ணமாயிருப்பது, உதாரமாயிருப்பது, ஸத்யமான தேஜஸ்ஸில் இருப்பது, எப்போதும் ஏகமாயிருப்பது இவை உண்டாயிருக்கின்றன. இவ்விதம் சிந்தித்துக்கொண்டிருக்கிற ஸங்

யாஸீ சீக்கிரம் ஸ்வரூபஸ்திதியையடைந்து, நிர்விகல்பமான ஸ்வரூபத்தையறிந்து நிர்விகல்பனுகவே ஆகிவிடலாம்.

ஆதுரன் (வியாதியுடையவன்) ஜீவித்து விட்டால் கிரமமாய் ஸந்யாஸம் செய்து கொள்ள வேண்டும். சூத்ரன், ஸ்திரீ, பதிதன், பஹிஷ்டை இவர்களோடு பேசக்கூடாது யதிக்கு தேவபூஜையும், உத்ஸவங்கள் தரிசிப்பதும் கிடையாது. ஆகையால் ஸந்யாஸிக்கு இந்த லோகமில்லை.

ஆதுரன் குடீசகன் இவர்களுக்கு பூர்லோகம், புவர்லோகம். பஹூதகனுக்கு ஸ்வர்க்கலோகம். ஹம்ஸனுக்கு தபோலோகம். பரமஹம்ஸனுக்கு ஸத்ய லோகம். துரீயாதீதன், அவதூதன் இவர்களுக்கு ஸ்வாத்மாவினிடமே கேவலம் ஸ்வரூபத்தை அநுஸந்தானம் செய்து கொண்டு, பிரமர கீடநியாயம் போல் ஆகிவிடுவது தான். ஸ்வரூபத்யானம் தவிர வேறு சாஸ்திரங்களை அப்யஸிப்பது, கழுதை குங்குமம் சுமப்பது போல் வீணுனதே. யதிக்கும் யோகசாஸ்திரங்களில் பிரவிருத்தி கூடாது. ஸாங்கிய சாஸ்திரத்தின் அப்யாஸம் கூடாது. மந்திரம் தந்திரம் இவைகளில் முயற்சி கூடாது. வேறு சாஸ்திரங்களில் சிரமம் கூடாது. அப்படியிருந்தால் பிணத்திற்கு அலங்காரம் செய்தாற் போல் தனது கர்மா, ஆசாரம், வித்தை இவைகளுக்கு தூரத்திலுள்ளவனுகிவிடுகிறுன் ஸந்யாஸி நாம ஸங்கீர்த்தனம் செய்யக்கூடாது. செய்யும் கர்மத்தின் பலனையனுபவிக்கிறுன் விளக்கெண்ணெயின் நுரைபோல் எல்லாவற்றையும் விட்டு விடவேண்டும். தேவதையின் பிரஸாதத்தை அடையக்கூடாது. வெளிப்படையாய் தேவதார்ச்சனம் செய்யக்கூடாது. தன்னைத்தவிர மற்றவையெல்லாம் விட்டு விட்டு, வண்டின் விருத்தியால் ஆஹாரத்தைத் தேடிக்கொண்டு, இளைத்தவனுய் ஆகி கொழுப்பை விருத்தி

செய்து கொள்ளாமல் ஸஞ்சரிக்கவேண்டும். மாதுகரவிருத்தியாலாவது, ஸையாகியபாத்திரத்தாலாவது, ஸாயாகிய பாத்ரத்தாலாவது, காலங்கழிக்கவேண்டும். ஸந்யாஸி ஆத்மஞானமுள்ளவனாயிருந்து கொண்டு தனக்குப் போரும்படியான ஆஹாரத்தைத் தேடவேண்டும். ஆஹாரத்திற்கு இரண்டு பாகங்களையும் தீர்த்தத்திற்கு ஒரு பாகத்தையும் ஆக மூன்று பாகங்களை பூர்த்தி செய்து விட்டு காற்று ஸஞ்சரிப்பதற்காக நான்காவது பாகத்தை பாக்கி விடவேண்டும். தினந்தோறும் பிக்ஷையாலேயே காலம் போக்கவேண்டாம். ஒருகாலத்திலாவது ஒரேயிடத்தில் சாப்பிடக்கூடாது. வருத்தப் படாமல் ஸந்தோஷத்தோடு எதிர்பார்க்கிறவர்களுடைய வீட்டிற்கு அவச்யம் போகவேண்டும். ஸத்கர்மானுஷ்டானம் உள்ளவர்களுடைய ஐந்து அல்லது ஏழு வீடுகளில் பிக்ஷையை இச்சிக்கவேண்டும். அவ்விடத்தில் மாடு கறக்கும் காலமவ்வளவு பிக்ஷைக்கு எதிர்பார்க்கவேண்டும். வெளியில் வந்து விட்டால் மறுபடி உள்ளே போகக்கூடாது. இராத்ரி சாப்பிடுவதைக்காட்டிலும் உபவாஸம் (பட்டினி) மேலானது. உபவாஸத்தை காட்டிலும் யாசிக்காமல் கிடைப்பது மேலானது. யாசிக்காமல் கிடைப்பதைகாட்டிலும் பிக்ஷையால் கிடைப்பது மேலானது. ஆகையால் பிக்ஷையால் காலங்கழிக்கவேண்டும். பிக்ஷைக்குப்போகும் காலத்தில் இடது புறமாயும் வலது புறமாயும் (தாறுமாறாய்) வீடுகளில் பிரவேசிக்கக்கூடாது.

தோஷமில்லாத வீட்டை மோஹத்தால் அதிக்ரமிக்கக்கூடாது. வேதாத்யயனம் செய்தவனானாலும் சிரத்தை பக்தி இல்லாவிட்டால் அவனது அன்னத்தை பிக்ஷையெடுக்கக்கூடாது. சிரத்தை பக்தியுள்ளவனாயிருந்து விராத்யனாய் (ஸம்ஸ்காரமற்றவனாய்) இருந்தாலும் அவனது வீட்

டில் பிக்ஷை செய்யலாம். பிக்ஷையானது மாதுகரம், அஸம்க்லிப்தம், ப்ராக்ப்ரணீதம், அயாசிதம், தாத்காலிகம் என்று ஐந்து வகைப்படும். மனதில் தீர்மானமில்லாமல் மூன்று, ஐந்து அல்லது ஏழு வீடுகளின் பிக்ஷைவாங்கிவண்டு தேனை சேர்ப்பதுபோல் சேர்ப்பது மாதுகரம் என்னப்படும். காலையிலாவது அல்லது முன்தினத்திலாவது, பக்தர்களால் அடிக்கடி பிரார்த்திக்கப்பட்ட பிக்ஷை ப்ராக்ப்ரணீதம் (முன்னால் சித்தம் செய்யப்பட்டது) என்னப்படும். இருந்தாலும் அதனால் காலங்கழிக்கலாம். பிக்ஷை வாங்க புறப்படும் காலத்திற்கு முன், எவராவது வந்து கூப்பிட்டால் அந்த பிக்ஷை அயாசிதம் என்னப்படும். முமுக்ஷுக்கள் (மோக்ஷத்தை இச்சிக்கிறவர்கள்) அதைசாப்பிடலாம். சாப்பிடும் ஸமயத்தில் பிராம்மணன் வந்து நமஸ்கரித்து பிக்ஷைக்குச் சொல்லுவது தாத்காலிகம் என்னப்படும். அப்போது யதிகள் அதைசாப்பிடலாம். பிராம்மணன் மடத்திற்குக் கொண்டு வரும் ஸித்தமான பிக்ஷை உபபன்ன மென்னப்படும். யதியானவன் துலுக்கன்வீட்டிலிருந்து, மாதுகரத்தினால் பிக்ஷை வாங்கினாலும் வாங்கலாமேயொழிய. பிருஹஸ்பதிக்கு ஸமமானவனாயிருந்தாலும் அவன் வீட்டிலேயே சாப்பிடுவது என்னும் ஏகான்னத்தை ஒழிக்கவேண்டும். யாசிதம், அயாசிதம் என்னும் பிக்ஷைகளால் காலம் கழிக்கவேண்டும்.

தோஷமுள்ளவைகளைத் தொடுவதால் வாயுவும், தோஷமுள்ளவைகளைக்கொளுத்துவதால் அக்னியும், மலமூத்ரங்களால் ஜலமும் அன்னதோஷத்தால் ஸந்யாஸியும் தோஷமடைவதில்லை.

ஸந்யாஸியானவன் அதி[illegible] மத்யானத்திற்குமேல் வீட்டில் புகைபடங்கினபிறகும், உலக்கைசப்தம் அடங்கின

பிறகும், நெருப்பு அணைந்தபிறகும், ஜனங்களெல்லாம் சாப்பிட்டபிறகும்; பிக்ஷையெடுக்கவேண்டும். நிந்திக்கப்பட்டவனையும், பதிதனையும், பாஷண்டனையும், தேவபூஜை செய்கிறவனையும் தவிர மற்றவர்களிடம் ஸந்யாஸி பிக்ஷையெடுக்கவேண்டும். ஆபத்காலத்தில் எல்லாஜாதிகளிலும் பிக்ஷையெடுக்கலாம். நெய் நாய் மூத்திரத்திற்கு ஸமானம். தேன் கள்ளுக்கு ஸமானம். எண்ணை பன்றி மூத்ரத்திற்கு ஸமானம். பருப்பு பூண்டுக்குஸமானம். உளுந்தம் வடை முதலியவை பசுவின் மாம்ஸத்திற்கு ஸமானம். பால் மூத்ரத்திற்கு ஸமானம். ஆதலால் ஸந்யாஸி வெகு பிரயாஸைப்பட்டு நெய் முதலானவைகளை விலக்கிவிடவேண்டும். நெய் பருப்பு முதலியவைகளோடு கூடின அன்னத்தை ஒரு காலம் சாப்பிடவேகூடாது. இவனுக்குக்கைதான் பாத்ரம். அதனாலேயே தினந்தோறும் ஜீவனம் செய்யவேண்டும். கையைபாத்ரமாயுடைய ஸந்யாஸி அடிக்கடி பிக்ஷைவாங்கக்கூடாது. ஸந்யாஸியானவன் பசுவானது போல் வாயினால் ஆஹாரத்தைத்தேடுங்காலத்தில் எல்லாரிடம் ஸமமாய் ஆகிவிடுவான். அதனால் அவன் மோக்ஷத்தையடைவான். நெய்யை ரக்தத்தைப் போலவும், ஒரேயிடத்தில் ஸாப்பிடுவதை மாம்ஸத்தைப்போலவும், வாஸனை பூசிக்கொள்ளுவதை மலத்தை பூசிக்கொள்ளுவதைப்போலவும், ஒறப்பை சண்டாளனைப்போலவும், வஸ்திரத்தை எச்சிக்கலையைப்போலவும், எண்ணை தேய்த்துக்கொள்ளுவதை ஸ்திரீஸம்போகம் போலவும், ஸ்நேஹிதரோடு ஆனந்திப்பதை மூத்ரத்தைப்போலவும், இச்சையை பசுவின் மாம்ஸத்தைபபோலவும், முன்னால பழக்கமுள்ள இடத்தை பரச்சேதியைப்போலவும், ஸ்த்ரீயை பாம்பைப் போலவும், ஸ்வர்ண[illegible]மென்னும் விஷத்தைப்

போலவும், ஸபையை ச்மசானத்தைப் போலவும், ராஜதா ஸியை கும்பீபாகமென்னும் நரகத்தைப் போலவும், ஒரே இடத்தில் சாப்பிடுவதை பிரேதத்திற்குக்கொடுக்கும் பிண்டம் போலவும், விட்டு ஒழித்துவிடவேண்டும். ஸந்யாஸிக்கு வெளிப்படையாய் தேவதார்ச்சனம் கிடையாது. இந்தஉலக விருத்தியை விட்டு விட்டு ஜீவன் முக்தனாகவேண்டும்.

ஆஸனம், பாத்ரலோபம், ஸஞ்சயம், சிஷ்யஸங்க்ரஹம், திவாஸ்வாபம், வ்ருதாலாபம் என்கிற ஆறும் யதிக்கு பந்தத்தையே (இவ்வுலகில் பற்றுதலையே) யுண்டாக்கும். மழை காலத்தைத்தவிர, மற்ற காலங்களில் ஒரேயிடத்திலிருப்பது, ஆஸனம் என்னப்படும். ஸந்யாஸிக்கு ஏற்படுத்தப்பட்ட சுரைக்குடுக்கை முதலான பாத்ரங்கள் அகப்படாதபோது வேறு எதையாவது கிரஹித்துக்கொள்ளுவது பாத்ரலோபம் என்னப்படும். கிரஹிக்கப்பட்டதண்டம் முதலானவை யிருக்கும்போது தண்டம் முதலானதுகளை பின்னிட்டு ஸமயத்திற்கு உபயோகப்படுமென்று சேர்த்து வைத்துக்கொள்ளுவது ஸஞ்சயம் என்னப்படும். தவை போயில்லாமல் தனது சுச்ருஷைக்காகவாவது, தன்னை பூஜிப்பதற்காகவாவது, கீர்த்திக்காகவாவது சிஷ்யர்களை சேர்த்து வைத்துக்கொள்ளுவது சிஷ்யஸங்கிரஹம் என்னப்படும். வித்தையானது பிரகாசமுள்ளதாயிருப்பதால் திவா (பகல்) என்னப்படும். அவித்தை ராத்ரி என்னப்படும். வித்யாப்யாஸத்தில் அஜாக்ரதையானது திவாஸ்வாபம் என்னப்படும். வேதாந்தவிஷயத்தையும் அப்படியே பிக்ஷை வார்த்தையையும் விட்டு விட்டு அனுக்ரஹமும் போகக்ஷேமாதிகளை விசாரிப்பதும் ஆகிய மற்றவை வ்ருதாலாபம் (வீண்வார்த்தை) என்னப்படும்.

உபநிஷத்பஞ்சகம்:

ஒரேயிடத்தில் சாப்பிடுவது, மதம், மாத்ஸர்யம், கந்தம், புஷ்பம், அலங்காரம், தாம்பூலம், எண்ணை தேய்த்துக் கொள்ளுதல், விளையாடுதல், ஸுகங்களை இச்சித்தல், ரஸதாதுவாதம், ஆத்மஸ்துதி, பரநிந்தை, கேடகம், ஜ்யோதிச்சாஸ்திரம் விலைக்குவாங்கல், விற்றல், கார்யங்களில் சண்டைபோடுவது, குருவாக்யத்தைத்தாண்டுவது, ஸமாதானம், சண்டை, வாஹனம், கட்டில், வெள்ளை வஸ்திரம், ரேதஸ்ஸை விடுவது, திவாஸ்வாபம், பிக்ஷையையமீற்றவைத்துக் கொள்ளல், தைஜஸம், விஷம், ஆயுதம், விதையுள்ளவை, ஹிம்ஸை, க்ரூரமாயிருப்பது, மைதுனம், க்ருஹஸ்தனுடைய தர்மங்கள், தனது கோத்ரத்திற்குத் தகுந்த ஸகல ஆசாரங்கள், தாய், தகப்பன், வீடு, தனம் இவையெல்லாம் ஸந்யாஸம் செய்து கொண்டமாத்ரத்தால் விடப்பட்டன. இவ்வாறு தள்ளப்பட்ட இவைகளை மறுபடியும் ஸேவிக்கிறவன் கீழேபோய் விடுவான் (பதிதனாவான்). புத்திசாலியாயிருந்தால் மிகவும் வயது சென்றவனானாலும் மிகவும் வயது சென்றவர்களாயிருக்கிற ஸ்திரீகளிடத்திலும் நம்பிக்கைவைக்கக்கூடாது. கிழிந்த துணியானது மிகவும் கிழிந்த கந்தைகளோடு சேருகின்றதல்லவா. ஸ்தாவரம்' ஜங்கமம், பீஜம், தைஜஸம், விஷம், ஆயுதம், இந்த ஆறுகளையும் யதியானவன் மலமூத்ரங்களைப்போல் தள்ளிவிட வேண்டும். யதியானவன் ஆபத்து இல்லாதகாலத்தில் கொஞ்சங்கூட வழிக்கு ஆஹாரத்தை வாங்கிக்கொள்ளக் கூடாது. ஆபத்தில் அன்னம் கிடைக்காதவரையில் பக்வமான பதார்த்தத்தை எடுத்துக்கொள்ளலாம். வியாதியில்லாதவனாயும் யௌவனமுள்ளவனாயுமிருக்கிற ஸந்யாஸி வீட்டில் வஸிக்கக்கூடாது. பிறருக்காக ஒன்றையும் வாங்கிக் கொள்ளவும் கொடுக்கவும் கூடாது. மிகவும் தீனத்தன்மை

யை யடைந்து. ஸந்யாஸியானவன், பிராணிகளின் க்ஷேமத்திற்காக ஸஞ்சரிக்கவேண்டியது, பக்வமானதையாவது, பக்வமில்லாததையாவது, யாசிக்கிறவன் கீழே போய் விடுவான் (பதிதனாவான்). அன்னதானம் செய்தாலும், அல்லது வஸ்திரம் முதலியவைகளையும், கமண்டலங்களையும், பட்டுவஸ்திரங்களையும் யாசித்தாலும் பதிதனாவான். இதற்கு ஸந்தேகமில்லை. அத்வைதமாகிய ஓடத்திலேறிக் கொண்டு ஜீவன்முக்தனாகவேண்டும். வாக்கைதண்டிப்பதற்கு மௌனமும், சரீரத்தை தண்டிப்பதற்கு பட்டினியும், மனதை தண்டிப்பதற்கு பிராணாயாமமும், விதிக்கப்படுகிறது. ஜந்துவானது; கர்மத்தால் கட்டப்படுகிறது. வித்தையால் விடப்படுகிறது. ஆதலால் கரைகண்ட ஸந்யாஸிகள் கர்மாநுஷ்டானம் செய்வதில்லை. தெருவில் வெகு வஸ்திரங்களிருக்கின்றன. பிக்ஷை எங்கும் கிடைக்கின்றது. விஸ்தீர்ணமான பூமிபடுக்கையாகவிருக்கின்றது. ஆதலால் யதிகள் எதனால் துக்கமடையவேண்டும். எந்த யதியானவன் ஆத்மாவினிடம் அக்னிகளை ஸமாரோபணம் செய்து கொண்டு ஸகல பிரபஞ்சத்தையும் ஞானாக்னியில் ஹோமம் செய்கிறானோ அவன் அக்னிஹோத்ரமுள்ள மஹாஸந்யாஸி. பிரவிருத்தியானது, மார்ஜாரீஎன்றும், வானரீஎன்றும் இருவகைப்படும். ஞானாப்யாஸம் உள்ளவர்களுக்கு மார்ஜாரி (பூனையினுடையது போன்ற) பிரவிருத்தியும், வானரீ (குரங்கினுடையது போன்ற) பிரவிருத்தியும் ஏற்பட்டிருக்கின்றன. தன்னைக்கேழ்க்காதவனுக்கும் அந்யாயமாய்க்கேழ்க்கிறவனுக்கும் ஒன்றும் சொல்லக்கூடாது. தான் நல்லபுத்தியுள்ளவனாயிருந்துகொண்டு, எல்லாவற்றையும் தெரிந்துகொண்டும் உலகத்தில் ஜடம்போலிருக்கவேண்டும். ஸகல பாபங்களின் கூட்டம் வந்துவிட்டால் தாரகமந்திரத்தை

பன்னீராயிரம் தடவை அப்பியாஸம் செய்ய வேண்டு
அது எல்லாவற்றையும் நாசஞ்செய்துவிடும். எவன் தின
தோறும் பிரணவத்தை பன்னீராயிரம் தடவை ஜபஞ் செ
கிறானோ அவனுக்கு பன்னிரண்டு மாதங்களுக்குள் பர
பிரும்மம் பிரகாசிக்கும். என்று உபநிஷத்.

ஹரி: ஓம். தத்ஸத்.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஓம் ஆப்யாயந்து + சாந்தி:

ஸந்யாஸோபநிஷத் முற்றிற்று.

உபநிஷத்பஞ்சகம்.

முற்றிற்று.

Printed At The 'Sri VaneeBhooshanam' Press
TRIPLICANE, MADRAS.